வானவில்

VAANAVIL

இதழ் 157 | தை 2024

ISSUE 157 | JANUARY 2024

# மீண்டும் ஓர் 'அரகலய'?




இலங்கையில் மீண்டும் ஓர் 'அரகலய' போராட்டம் நடைபெறுமா என்ற கேள்வியும் எதிர்பார்ப்பும் நாட்டில் நிலவி வருவதை அவதானிக்க முடிகிறது. அதற்குக் காரணம் நாட்டில் விலைவாசிகள் என்றுமில்லாத அளவு உயர்ந்திருப்பதுதான்.

2022இல் நாட்டில் 'அரகலய' என்ற பெயரில் மிகப்பெரிய மக்கள் போராட்டம் ஒன்று உருவாகியது. அதன் காரணமாக அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸவும், அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஸவை பிரதமராகக் கொண்டு இருந்த அரசாங்கமும் பதவி விலக வேண்டி வந்ததுடன், கோத்தபாய ராஜபக்ஸ நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையும் உருவானது.

சுமார் 70 இலட்சம் வாக்குகள் பெற்று ஜனாதிபதியான கோத்தபாய ராஜபக்ஸ, மிகக் குறுகிய காலத்துக்குள் மக்கள் ஆதரவை இழந்து, பதவியையும் நாட்டையும் விட்டு வெளியேற வேண்டிய சூழல் உருவானது எப்படி என்பது ஆழமான ஆய்வுக்குரியது. இருப்பினும் அதற்கான காரணங்கள் சிலவற்றை கோடிட்டுக் காட்டலாம்.

கோத்தபாயவின் துரதிஸ்ட்டமோ என்னவோ அவர் பதவி ஏற்ற காலத்தில் உலகளாவிய முறையில் ஏற்பட்டிருந்த கொவிட் பெருந்தொற்று இலங்கையையும் மிகவும் மோசமாகத் தாக்கியிருந்தது. ஆனால் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை அந்த நெருக்கடியை ஓரளவு வெற்றிகரமாகச் சமாளித்தது. ஆனால் இதற்காக அரசு பெருந்தொகை பணத்தை செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. மறுபக்கத்தில் இந்தத் தொற்றுநோய் காரணமாக இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது குறைந்து அல்லது இல்லாமல் போய் அதன் காரணமாக இலங்கைக்கு கிடைத்து வந்த அந்நியச் செலாவணி வருவாய் முற்றிலுமாக நின்றுபோய் விட்டது.

மறுபக்கத்தில், கோத்தபாய அரசு பின்பற்றிய மேற்கத்தைய எதிர்ப்பு கொள்கைகள் காரணமாக மேற்கத்தைய நாடுகள் அவருடைய அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைப் பேரவை போன்றவற்றின் ஊடாக அரசியல் நெருக்கடியையும், வேறு வழிகளில் பொருளாதார நெருக்கடியையும் கொடுக்கத் தொடங்கின.

மேற்கத்தைய நாடுகள் கொடுத்த இந்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக கோத்தபாய அரசு, பொருளாதாரத்தில் சுயசார்பை அடையும் நோக்குடன் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள எத்தனித்தது. அதன் ஒரு பிரதான முயற்சியாக விவசாயத்துக்குத் தேவையான செயற்கை இரசாயன இடுபொருட்களை முற்றிலுமாகத் தடை செய்தது. மாற்று ஏற்பாடு ஏதும் இல்லாமல் எடுத்த இந்த நடவடிக்கையால் விவசாயிகள் தமது வழமையான விவசாயத்தில் ஈடுபட முடியாமல் விவசாயம் பெரும் தேக்க நிலையை அடைந்தது.

மறுபக்கத்தில், அந்நியச் செலாவணி இன்மையால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், எரிசக்திப் பொருட்கள் என்பனவற்றை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை உருவானது. இந்த நிலைமை மக்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியதால், மக்கள் அரசுக்கெதிராக கிளர்ச்சி செய்யும் மனநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இத்தகைய ஒரு நிலையை உருவாக்குவதில் மேற்கத்தைய சக்திகளும் அவர்களுடைய உள்ளூர் அடிவருடிகளும் திட்டமிட்டுச் செயல்பட்டிருந்ததால், அவர்கள் இந்தச்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# வெற்றிகரமாக 14வது ஆண்டில் வானவில்

வருடாவருடம் தை மாதம் பிறக்கும் போது, வானவில் இதழுக்கு வயதொன்றும் அதிகரித்து வருவதால் எங்கள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எங்களைப்போலவே வானவில் இதழின் வாசகர்ப்பரப்பும் இதனைக் கவனித்துக் கொண்டாடி மகிழ்வார்களென எதிர்பார்க்கின்றோம். இத்தருணத்தில் வானவில் இதழுக்கு தொடர்ச்சியாக ஆதரவும் ஊக்கமும் அளித்து வரும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மாதமொன்று பதினாறு பக்கங்களில் மாத்திரமே வெளியாகும் வானவில் இதழில் மிக நீண்ட கட்டுரைகளை உள்ளடக்க முடியாது. அதேபோல வானவில் இலங்கையை பின்புலமாகக் கொண்டிருப்பதால் முழுக்க, முழுக்க இலங்கை நிலவரங்களை முதன்மைப்படுத்தியோ, அதேபோலவே தென்னாசியா மற்றும் சர்வதேச நிலவரங்களுக்கு அதிகளவில் முன்னுரிமை வழங்கியோ வெளியிட முடியாது. முடிந்த வரையில் வானவில் சமநிலை ஒன்றினைப் பேணி வெளிவருகின்றதென எண்ணுகின்றோம்.

வானவில் போன்ற எழுத்து ஊடகங்களான சஞ்சிகைகள், செய்திப்பத்திரிகைகள், மற்றும் புத்தகங்களின் வெற்றி என்பது மக்களின் வாசிக்கும் திறனிலேயே தங்கியுள்ளது. இத்திறனே சகலவிதமான எழுத்து ஊடகங்களினதும் விற்பனைகளை அதிகரித்து, எழுத்தாளர்களை மேலும், மேலும் படைக்கத் தூண்டும்.

நூல் வாசிப்பு என்பது அறிவின் வாசல்களைத் திறக்கும் என அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். வாசிப்பதால் மட்டுமே மனக்கண்கள் வழியே இன்னொரு சமூகத்தை எளிதாக புரிந்து கொள்ளலாம். உங்களை எடை போடவும் பிறரை உணரவும் நூல்களே துணைபுரிபவை. புத்தகங்கள் பண்பாட்டுத் தளத்தினை விளக்குபவையாக உள்ளன.

பொழுதுபோக்கு, அறிவுபெறுதல் என்பவற்றைத் தாண்டி வாசிப்பு அனுபவம் வாழ்வை சுவாரசியமாக்குகின்றது. உடலுக்குப் பல பயிற்சிகள் இருப்பதுபோலவே, உள்ளத்துக்கான பயிற்சிகளில் புத்தக வாசிப்பு முதன்மை பெறுகின்றது. அது மனித மனதை விலாசப்படுத்தும். தொடர் வாசிப்பு குறுகிய எல்லைகளைக் கடக்க உதவும்.

குழந்தைகளும் பெண்களும் புத்தக வாசிப்பில் அதிகம் பின்தங்கிய நிலையில் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக குழந்தைகளை இன்றைய நவீன காணொலிக் கருவிகளிடமிருந்து எப்படியாவது மீட்டெடுத்தாக வேண்டும். அதேநேரத்தில் குழந்தைகளுக்கான வாசிப்பு இயக்கத்தை விரிவுபடுத்தி, தொடர்ச்சியாக்க வேண்டும்.

குழந்தைகளை புத்தகக் கண்காட்சிகளுக்கும் நூலகங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும். பாடப்புத்தகங்களுக்கு வெளியே, குழந்தைகளின் இயல்பான திறமைகளை மேம்படுத்தும் வகையிலான நூல்கள் அதிகமாக வெளிவர வேண்டும். குழந்தைகளின் வாசிப்புச் செயல்பாட்டை வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியர்களும் ஊக்கப்படுத்த வேண்டும்.

எழுத்தறிவு கூடியுள்ள இன்றைய காலகட்டத்தில், பெண்களின் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதை எளிதில் கண்டு கொள்ளலாம். ஒரு காலத்தில் ஜனரஞ்சக வார, மாத இதழ்கள் பெண்களுக்கான பிரதான வாசிப்புத் தளமாக அமைந்திருந்தன. ஆனால் இன்று அந்த இடத்தை தொலைக்காட்சித் தொடர்கள் முழுமையாக ஆக்கிரமித்து விட்டன. அதனால் எல்லா வீடுகளிலும் வாசிப்பு என்பது அருகி வருகின்றது. வீட்டில் வாசிப்புச் சூழல் அமையாமல், குழந்தைகளின் வாசிப்பை மேம்படுத்தவே முடியாது.

ஐரோப்பா, மேற்கு–மத்திய கிழக்கு ஆசியா, செங்கடல் என தற்போதைக்கு மூன்று முனைகளில் யுத்தம் நடைபெற்று வருகின்றது. இதனால் பல ஊடக ஆய்வாளர்கள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த சர்வதேச நெருக்கடி நிலைமைகளை, தற்போதுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டு வருகின்றார்கள்.

இலங்கை சார்ந்த தமிழ் ஊடகங்கள் இன்றைய சர்வதேச நிலவரங்களுக்கு பொதுவாக அதிகம் முக்கியத்துவம் வழங்குவதில்லை. அப்படி ஏதாவது சொன்னாலும் பரபரப்பு நிறைந்த செய்தியாக மட்டுமே இருக்கும். இது மிகப்பெரிய தவறு. இன்றைய இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளை சர்வதேச நெருக்கடிகளின் பின்னணியிலிருந்தும் ஆராயப்பட வேண்டும். அதனால் தான் இன்றைய இலங்கை மற்றும் சர்வதேச நிலவரங்களில் வானவில் போன்ற சிறிய, எளிமையான பத்திரிகையின் அவசியம் பலராலும் உணரப்பட்டு வருகின்றது.

ரஷ்யாவிற்கு எதிராக நேட்டோ நாடுகளினதும், 75 வருட ஒடுக்குமுறை காரணமாக மிகவும் பலவீனப்பட்டிருக்கும் பலஸ்தீனிய தேசிய இனத்திற்கு எதிராக சியோனிச இஸ்ரேலினதும் யுத்த முழக்கங்கள், மேற்கு நாட்டு ஊடகங்களில் திரும்பத்திரும்ப பிரச்சாரப்படுத்தப்பட்டு வருகின்றன. குண்டு வீச்சுகளால் நாளாந்தம் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் மானிட அழிவுகளையும் கட்டுமானச் சிதைவுகளையும் மேற்கு நாட்டு ஊடகங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே காட்டினாலும், அவற்றிற்கு அதிகம் முக்கியத்துவம் வழங்குவதில்லை. இஸ்ரேல் பலஸ்தீனர்களை இனஅழிப்பு செய்கின்றதென, இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தென் ஆபிரிக்கா தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பான செய்தியை, மேற்குலக ஊடகங்கள் சிறிய செய்தியாகவே வெளியிட்டன என்பது இதற்கு நல்ல சான்று.

இஸ்ரேல் காஸாவில் ஊடகவியலாளர்களை குறிவைத்துக் கொன்று வருகின்றது. கடந்த மூன்று மாதங்களில் 117 ஊடகவியலாளர்கள் விமானக் குண்டு, ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களுக்கு பலியாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அரபு மொழி ஊடகங்களுக்காக உயிரைத் துச்சமாக மதித்து காஸாவில் பணி புரிந்தவர்கள். காஸாவின் மனிதப்பேரழிவினை வெளி உலகிற்கு எடுத்துச் செல்லப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்பதற்காகவே இஸ்ரேல் இவர்களைக் கொன்று வருகின்றது. இவர்களின் தியாகத்திற்கு வானவில் அஞ்சலி செலுத்தி நிற்கின்றது.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# சமசமாஜ கட்சிக்கு வயது 88!



**காலிமுகத்திடலில் என்.எம்.பெரேரா உரையாற்றும் காட்சி (23 ஜூலை, 1953)**

**இ**லங்கையிலுள்ள இடதுசாரி கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜ கட்சி அண்மையில் தனது 88 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி இருக்கிறது.

இந்தக் கட்சி 1935 ஆம் ஆண்டு டிசம்பர் 18இல் ஆரம்பிக்கப்பட்டது. சமசமாஜ கட்சி ஒரு இடதுசாரிக் கட்சியாக ஆரம்பிக்கப்பட்டது மட்டுமின்றி, இலங்கையின் முதலாவது அரசியல் கட்சி என்ற பெருமைக்கும் உரியது.

இந்தக் கட்சியின் உருவாக்கத்திற்கான ஆரம்பகால நோக்கங்கள் இரண்டு வகைப்பட்டவை.

ஒன்று, அன்று இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து பூரண சுதந்திரம் பெறுவது. இரண்டாவது, இலங்கையில் சோசலிஸ அரசொன்றை ஸ்தாபிப்பது.

கட்சியின் ஆரம்பகாலத் தலைவர்களாக பிலிப் குணவர்த்தன, டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தன, பேர்னாட் சொய்ஸா போன்றவர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் இலங்கையிலுள்ள செல்வந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்ததுடன், சிலர் இங்கிலாந்தில் உயர்கல்வி கற்றவர்களாகவும் இருந்தனர். ஆரம்ப காலத்தில் சமசமாஜ கட்சிக்கு இலங்கையின் ஏழை எளிய மக்களிடம் செல்வாக்கு இருந்ததிற்கு இந்தத் தலைவர்களின் வர்க்கப் பின்னணியும் ஒரு காரணம் எனலாம்.

இந்தத் தலைவர்களின் வர்க்கப் பின்னணியே இவர்கள் ஆரம்பத்திலேயே அடிசறுக்க காரணமாகவும் அமைந்துவிட்டது. அதாவது, இலங்கைக்கு பிரித்தானியரிடமிருந்து தேசிய விடுதலையை வென்றெடுப்பதே புரட்சியின் கட்டம் எனவும், அதைத் தொடர்ந்து புதிய வடிவிலான மக்கள் ஜனநாயக அரசொன்றை அமைப்பதே புரட்சியின் இரண்டாவது கட்டம் எனவும், அதனைத் தொடர்ந்து சோசலிச அமைப்பொன்றுக்கு மாறிச் செல்வதே புரட்சியின் மூன்றாவது கட்டம் என்றும், சமசமாஜ கட்சியில் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த மார்க்சிய – லெனினியவாதிகள் கருதினர்.

**சுப்பராயன்**

ஆனால், பிற்காலத்தில் சமசமாஜ கட்சியின் தலைமையை அலங்கரித்த தலைவர்கள் ரொட்ஸ்கியவாத கருத்துக் கொண்ட தலைவர்கள். இவர்கள் புரட்சியின் வெவ்வேறு காலகட்டங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற்ற கையோடு சோசலிச அரசொன்றை அமைத்துவிட முடியும் என்ற கற்பனாவாதத்தில் மூழ்கியிருந்தனர். அதன் காரணமாக கட்சிக்குள் கருத்து முரண்பாடுகளும் வாதப்பிரதிவாதங்களும் எழுந்தன.

கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் உருவாவதிற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அதாவது, இரண்டாம் உலக யுத்த காலத்தில் உலகை கபளீகரம் செய்ய முனைந்த ஹிட்லர் தலைமையிலான நாஜி ஜேர்மனிக்கு எதிராக ஸ்டாலின் தலைமையிலான சோசலிச சோவியத் யூனியன், ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளான இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவுடன் ஒரு ஐக்கிய முன்னணி அமைத்து ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்டது. அன்றைய உலக நிலைமையில் ஹிட்லரின் நாஜி ஜேர்மனியைத் தோற்கடிப்பதுதான் தலையாய தேவையாக இருந்ததால், இத்தகையதொரு ஐக்கிய முன்னணி காலத்தின் கட்டாயமாக இருந்தது.

ஆனால் சமசமாஜ கட்சியில் இருந்த ரொட்ஸ்கியவாதத் தலைவர்கள் சோவியத் யூனியனின் நிலைப்பாட்டை ஏற்கவில்லை. அவர்கள் ஜேர்மனியை விட இலங்கையை ஆட்சி செய்த இங்கிலாந்துதான் பிரதான எதிரி என்ற நிலைப்பாட்டுக்கு வந்து, சோவியத் யூனியனை எதிர்க்க ஆரம்பித்தனர். அது மட்டுமின்றி, ரொட்ஸ்கியமே தமது தத்துவார்த்த நிலைப்பாடு என்றும் அறிவித்தனர். அதனால் பொதுவான ஒரு இடதுசாரிக் கட்சியாக ஆரம்பிக்கப்பட்ட சமசமாஜ கட்சி ஒரு ரொட்ஸ்கியவாதக் கட்சியாக மாறியது.

அதன் காரணமாக கட்சிக்குள் சிறுபான்மையினராக இருந்த மார்க்சிய – லெனினியவாதிகள் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, ஆரியவன்ச குணசேகர, எம்.ஜி.மெண்டிஸ் ஆகியோர் தலைமையில் வெளியேறி 1940 ஆம் ஆண்டு ஐக்கிய சோசலிச கட்சி என்ற புதிய கட்சியொன்றை அமைத்தனர். அந்தக் கட்சியே பின்னர் 1943 யூலையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாக தன்னை மாற்றிக் கொண்டது. இந்த இரு கட்சிகளின் உருவாக்கத்திலும் தோழர்கள் பீட்டர் கெனமன், நா.சண்முகதாசன், மு.கார்த்திகேசன் ஆகியோரின் பங்களிப்பும் இருந்தது.

இடதுசாரி இயக்கம் பிளவுண்டதன் காரணமாக இலங்கை மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமும், சோசலிசத்துக்கான இயக்கமும் பலவீனத்தை அடைந்தபோதிலும், சில முக்கியமான விடயங்களில் லங்கா

சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து செயல்பட்டன. அவற்றில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று 1947 இல் அன்றைய பிரித்தானிய அரசுக்கெதிராக இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக நடத்திய பொது வேலைநிறுத்தமாகும். இந்த வேலைநிறுத்தத்தின் போது பிரித்தானிய காலனித்துவப் பொலிசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பலர் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் அரசாங்க லிகிதர் சேவைச்சங்க உறுப்பினரான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி என்பவராவார். பொலிசார் சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேராவை நோக்கிச் சுட்டபொழுது அதைத் தடுக்க முயன்ற கந்தசாமி துப்பாக்கிக் குண்டுபட்டு தியாகியாக மரணமானார்.

இடதுசாரிக் கட்சிகள் கூட்டாக நடத்திய இன்னொரு போராட்டம் 1953 ஓகஸ்ட் 12 இல் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு எதிராக நடத்திய ஹர்த்தால் (பொது வேலைநிறுத்தம்) போராட்டமாகும். முழுமையான மக்கள் ஆதரவுடன் நடத்திய அந்தப் போராட்டத்தால் டட்லி அரசு கவிழ்ந்தது. அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே 1956 பொதுத்தேர்தலில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க வெற்றி பெற்று ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்றை அமைத்தார்.

இடதுசாரிக் கட்சிகளின் இன்னொரு முக்கிய போராட்டம், திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த 1963 ஆம் ஆண்டு இடதுசாரிக் கட்சிகள் தோற்றுவித்த 'இடதுசாரி ஐக்கிய முன்னணி' ஆகும். இந்த ஐக்கிய முன்னணியில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றுடன், இலங்கையில் "மார்க்சியத்தின் தந்தை" என வர்ணிக்கப்படும் பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் இடம் பெற்றிருந்தது.

இந்த ஐக்கிய முன்னணியின் முக்கியமான வேலைத்திட்டமாக பிரசித்திபெற்ற '21 கோரிக்கைகள்' அமைந்திருந்தது. அந்தக் கோரிக்கைகளில் பிரதானமான கோரிக்கை, அரச ஊழியர்களுக்கும் தனியார்துறை ஊழியர்களுக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு ரூபா சம்ள உயர்வு வழங்க வேண்டும் என்பதாகும்.

21 கோரிக்கைகளை வலியுறுத்தி கொழும்பில் மிகப்பெரிய ஊர்வலம் ஒன்றையும், பொதுக்கூட்டம் ஒன்றையும் இடதுசாரிக் கட்சிகள் நடத்தின. லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் நிருபர் ஒருவர் தெரிவித்த கருத்தின்படி அந்த ஊர்வலம் ஒரு இடத்தைக் கடக்க சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் பிடித்துள்ளது. அதேபோல, கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சுமார் 15 இலட்சம் மக்கள் திரண்டுள்ளனர். இத்தகைய ஒரு ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இலங்கையின் வரலாற்றில் பின்னர் ஒருபோதும் நடைபெறவில்லை என்பது அரசியல் நோக்கர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் செயற்பாடு அன்றைய சிறீமாவோ பண்டாரநாயக்க அரசுக்கு பெரும் பீதியை உண்டுபண்ணிய அதேநேரத்தில் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் உற்சாக அலையைத் தோற்றுவித்திருந்தது. மறுபக்கத்தில் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியிலும் இறங்கியது. இதனால் சிறீமாவோ அரசுக்கு இருபக்க நெருக்கடி உருவானது.

சிறீமாவோ பண்டாரநாயக்க தனது அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இடதுசாரி ஐக்கிய முன்னணியை உடைப்பது என்ற முடிவை எடுத்தார். அதன் அடிப்படையில் லங்கா சமசமாஜக் கட்சியுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அதன் ஒரு கட்டமாக சிறீமாவோவின் மகன் அனுர பண்டாரநாயக்கவுடன் கிரிக்கெட் விளையாட நுவரெலிய சென்ற சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என்.எம்.பெரேரா அங்கு வைத்து சிறீமாவோ அரசுடன் இணைவதென்ற முடிவை எடுத்தார். அதன் அடிப்படையில் என்.எம்.பெரேராவுக்கு நிதியமைச்சர் பதவியும், அக்கட்சியின் வேறு சில பிரமுகர்களுக்கு சில அமைச்சுப் பதவிகளும் கிடைத்தன. அதேநேரத்தில் சமசமாஜக் கட்சியால் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு சமாதியும் கட்டப்பட்டது.

பின்னர் 1965 இல் டட்லி சேனநாயக்க தலைமையில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அமைந்தபொழுது, சிறீமாவோவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமைந்த பாராளுமன்றவாத எதிர்க்கட்சிக் கூட்டணியில் சமசமாஜக் கட்சியுடன் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து கொண்டது. 1970இல் சிறீமாவோ தலைமையில் அமைந்த அரசாங்கத்தில் இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் அங்கம் வகித்தன. அது மட்டுமின்றி, பின்னர் சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஸ, கோத்தபாய ராஜபக்ஸ அரசுகளிலும் இந்த இரண்டு இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து செயற்பட்டமை வரலாறு.

சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் நிலவரங்களை எடுத்து நோக்கினால், ஐக்கிய தேசியக் கட்சியில் (ஐ.தே.க.) அங்கம் வகித்த பண்டாரநாயக்க அக்கட்சியில் இருந்து வெளியேறி 1951 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிய நிகழ்வு ஒரு முக்கியமான சம்பவமாகும்.

ஐ.தே.கவின் கொள்கைகள் ஏகாதிபத்திய சார்பாகவும், தரகு முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சார்பாகவும் இருந்தது. பண்டாரநாயக்க பிரதிநிதித்துவப்படுத்திய சக்திகள் அந்தக் கொள்கைகளை ஏற்கவில்லை. அவர்கள் தேசியவாதக் கொள்கைகளைக் கொண்டிருந்ததால், இலங்கையின் தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்தனர்.

அதன் காரணமாகவே, 1956 இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்ததும் பல ஏகாதிபத்திய விரோத, பெருமுதலாளித்துவ விரோத, நிலப்பிரபுத்துவ விரோத நடவடிக்கைகளை எடுத்தார். அந்த நடவடிக்கைகள் முற்போக்கானவை என்பதால் இடதுசாரிக் கட்சிகள் அவற்றை ஆதரித்தன. அதேநேரத்தில் பண்டாரநாயக்க மொழிப்பிரச்சினை விடயத்தில் "சிங்களம் மட்டும்" சட்டத்தைக் கொண்டு வந்தபோது இடதுசாரிக் கட்சிகள் அதைத் தீவிரமாக எதிர்த்தன. இடதுசாரிக் கட்சிகளின் சுயாதீனமான இந்த நிலைப்பாடு சரியானதொன்று.

தேசிய முதலாளித்துவக் கட்சி என்ற வகையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி

இடதுசாரிக் கட்சிகளின் இயல்பான நேச அணியாக இருந்ததே இதற்குக் காரணம். பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தில் இடதுசாரிக் கட்சிகள் தமது கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் அதேநேரத்தில் பண்டாரநாயக்க அரசு மேற்கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளை மட்டும் ஆதரித்ததால் அவர்களது செல்வாக்கு மக்கள் மத்தியில் பாதிக்கப்படவில்லை.

ஆனால், பிற்காலத்தில் அமைந்த சிறீமாவோ பண்டாரநாயக்கவினதும், ஏனைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளிலும் இடதுசாரிக் கட்சிகள் பங்கெடுத்ததுதான், அவர்களது அடிசறுக்கலுக்கும் வீழ்ச்சிக்கும் அடித்தளமிட்டது. அதன் காரணமாகவே இன்று இடதுசாரிக் கட்சிகள் மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து காணப்படுகின்றன. மக்கள் போராட்டங்களைக் கைவிட்டு, முற்றுமுழுதாக பாராளுமன்றவாதத்தில் மூழ்கியதாலேயே இடதுசாரிக் கட்சிகளுக்கு இந்தநிலை ஏற்பட்டது. மறுபக்கத்தில் பாராளுமன்றவாதத்தில் மூழ்கிய இந்த இடதுசாரிக் கட்சிகளின் இன்றைய மொத்த வாக்கு வங்கி ஒரு சதவீதம் கூட இல்லை என்பதுதான் உண்மை. அது மட்டுமின்றி, இடதுசாரிக் கட்சிகளின் அரசியல் தவறுகளால்தான் ஜே.வி.பி. என்ற சிங்கள குட்டி முதலாளித்துவ இனவாதக் கட்சி இடதுசாரிப் போர்வையுடன் உருவாகிச் செயல்பட முடிகிறது.

லங்கா சமசமாஜக் கட்சி தனது 88 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிற இந்தச் சந்தர்ப்பத்தில் அக்கட்சித் தலைமை தங்கள் கட்சி கடந்த காலத்தில் பின்பற்றிய கொள்கைகளையும் நடைமுறைகளையும் சுய விமர்சன ரீதியில் ஆராய்ந்து பார்ப்பது அவசியமானது. அப்பொழுதுதான் இலங்கையின் மூத்த அரசியல் கட்சியான தங்களால் ஏன் அதிகாரத்துக்கு வர முடியாமல் போனது என்பதையும், குறைந்தபட்சம் இன்று ஒரு பலமான அரசியல் கட்சியாகக்கூட திகழ முடியவில்லை என்பதையும் கண்டறிய முடியும். இல்லாவிடின் தற்பொழுது உள்ளது போல இன்னொரு முதலாளித்துவ – சில வேளைகளில் சிங்கள இனவாத – கட்சியின் தயவில்தான் உயிர்வாழும் நிலைமை ஏற்படும்.

# ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எழுப்பும் கேள்விகள்!

பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான கெவின்டு குமாரதுங்க (Gevindu Kumaratunga) இலங்கையின் நீதித்துறை சம்பந்தமாக சில கேள்விகளை எழுப்பியுள்ளார். கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இவற்றைக் கூறிய குமாரதுங்க, பாராளுமன்றத்திலும் இது சம்பந்தமாக சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதாவது, உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும், ஏனைய நீதிமன்ற நீதிபதிகளுக்கும் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கான நிதியை பாராளுமன்றமே ஒதுக்க வேண்டும் எனக் கோரியுள்ள அவர், யுஎஸ்எயிட் (USAID) என்ற அமெரிக்க நிறுவனத்தினிடம் இதற்காக உதவி பெறுவது அதிகாரங்களில் வெளித் தலையீடுகளை அதிகரிக்கும் எனவும் எச்சரித்திருக்கிறார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் யுஎஸ்எயிட் நிறுவனத்திற்கு இருக்கும் செல்வாக்கு குறித்தும் கேள்வி எழுப்பிய குமாரதுங்க, சட்டத்தரணிகள் சங்கம் யுஎஸ்எயிட் நிறுவனத்திடமிருந்து வருடாந்தம் எவ்வளவு தொகை பணம் பெறுகிறது எனவும் கேட்டிருக்கிறார். இலங்கை உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் குழுவொன்று அமெரிக்காவில் பயிற்சி பெற்றுள்ள சூழ்நிலையிலேயே அவர் இக்கேள்விகளை எழுப்பியுள்ளார்.



கெவின்டு குமாரதுங்க

முன்னர் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகவும், வெளிவிவகாரச் செயலாளராகவும் இருந்த பிரசாத் காரியவாசம், ‘நல்லாட்சி’ காலத்தில் (2015 – 19) யுஎஸ்எயிட் வழங்கிய சம்பளத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் ஆலோசகராகப் பணி புரிந்ததை குமாரதுங்க இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்னார். காரியவாசம் 2017 ஒகஸ்டில் ‘அக்சா’ (Access and Cross Servicing Agreement) உடன்படிக்கையை இறுதிப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியதையும் குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். அந்த நேரத்தில் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூட இது சம்பந்தமாகத் தெரியப்படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

வெளிப்படையாகப் பேசுகின்ற தன்மையுடையவரான குமாரதுங்க, தற்போதைய விக்கிரமசிங்க – ராஜபக்ஸ அரசாங்கமும் அதே தற்கொலைக் கொள்கைகளையும் நடைமுறைகளையுமே பின்பற்றுவதாகக் குற்றம் சுமத்தினார்.

# நெருக்கடியில் எகிப்தின் பொருளாதாரம்

**கா**ஸா மற்றும் மேற்கு கரையில் வாழும் பலஸ்தீனர்களின் மீதான இஸ்ரேலியர்களின் தாக்குதலை நிறுத்துமாறு கோரி யெமன் நாட்டைச் சேர்ந்த ஹூத்தி இயக்கத்தினர் செங்கடல் வழியான கப்பல் போக்குவரத்தை முடக்கியுள்ளனர். இதனால் சூயஸ் கால்வாய் கப்பல் போக்குவரத்து இன்றி இருப்பதால், எகிப்து நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமான நிலைக்குச் செல்கின்றது. அந்நாட்டிற்கு உள்ள 18,970 கோடி டொலர்கள் கடனில் 4,226 கோடி டொலர்களை இந்த ஆண்டு செலுத்த வேண்டிய நிர்பந்தம் உள்ளது. இந்நிலையில் இயற்கை எரிவாயு ஏற்றுமதி, சுற்றுலா என எகிப்தின் முக்கிய பொருளாதார ஆதாரங்கள் முடங்கி உள்ளன. இதனால் காஸாவில் உடனடி போர் நிறுத்தமும் நாட்டிற்கு வெளியில் இருந்து உதவி உள்ளிட்டவை தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

# மகத்தான ஒக்ரோபர் புரட்சியும் அதன் தற்கால பொருத்தப்பாடும்!



**1917** நவம்பர் 7ந் திகதி (அல்லது ஜூலியன் நாட்காட்டியின்படி ஒக்டோபர் 25ந் திகதி. இதனால்தான் ஒக்ரோபர் புரட்சி என்று கூறப்படுகிறது) போல்ஷ்விக் கட்சி ரஷ்யாவின் அரசு அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதாக தோழர் லெனின் அறிவித்தார்.

மனிதகுல வரலாற்றில் முதல்முறையாக, ஏழைகளும், சுரண்டப்பட்ட தொழிலாளர் வர்க்கமும் அரசு அதிகாரத்தை கைப்பற்றினர். தொழிலாளர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் கூட்டணியாக இணைந்து தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையின் கீழ் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியது, மனிதகுல வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் இல்லாத நிகழ்வாகும். இது தற்காலிக நடவடிக்கையின் விளைவல்ல, தவறான சூழ்நிலைகளில் உருவான ஒரு சம்பவமும் அல்ல. இன்று ஒரு கட்சி அல்லது ஆட்சியாளரை மற்றொரு கட்சி அல்லது ஆட்சியாளரால் மாற்றுவது போன்ற சாதாரண மாற்றமும் அல்ல. ஒரு சுரண்டல் வர்க்கத்திடமிருந்து மற்றொரு சுரண்டல் வர்க்கத்திற்கு அரசு அதிகாரம் மாற்றப்படும் செயலும் அல்ல. இது முற்றிலும் வேறுபட்டது. லெனினின் வார்த்தைகளில் சொன்னால், “இது உலக வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியுள்ளது. புதிய வர்க்க ஆட்சியின் சகாப்தம் – முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் ஒடுக்கப்பட்ட வர்க்கம் மனிதகுலத்தை முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்வதற்காக புதிய வாழ்வுமுறையை நோக்கி முன்னேறி வருகிறது”.

பிரபல பொருளாதார நிபுணர் பிரபாத் பட்நாயக் அடிக்கடி கூறுவதுபோல், மனித வரலாற்றில் முதல்முறையாக, அன்றைய புறநிலை மற்றும் அக சூழ்நிலைகளைப் பொறுத்து, தத்தவார்த்த ரீதியாக உருவாக்கப்பட்டு, ஒரு சிறந்த திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட புரட்சியாகும் இது.

“1905இல் நடைபெற்ற ரஷ்ய புரட்சி மற்றும் லெனின் தலைமையில் நடந்த சக்திவாய்ந்த ஒக்ரோபர் புரட்சி ஆகியன மார்க்சின் மாபெரும் படைப்பான மூலதனத்தின் உத்வேகமளிக்கும் புரட்சிகர சிந்தனைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் நேரடி விளைவுகளாகும்” என்று தோழர் பி.டி. ரணதிவேயும் 1967ஆம் ஆண்டில் கூறினார்.

*1917*ஆம் ஆண்டில் ரஷ்யாவில் உருவாகி வந்த சூழ்நிலை, பெப்ரவரி புரட்சி மூலம் ஜார் ஆட்சியை தூக்கி எறிந்து, பின்னர் ஒக்ரோபரில் சோசலிசப் புரட்சியாக அதனை மாற்றியமைத்திட பங்களித்தது. பெரும்பான்மையான ரஷ்ய மக்களின் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களை ஈடேற்றும் விதமாக, இந்த உலகத்தை உலுக்கிய புரட்சியில், தோழர் வி.ஐ.லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி முன்னணிப் பாத்திரம் வகித்தது.

**ஆர். கருமலையான்**

*1917*ஆம் ஆண்டில் ரஷ்யர்கள் முதலாம் உலகப் போரின் நடுவில் இருந்தனர் – நெருக்கடியில் முதலாளித்துவத்தின் எதிர்வினைகள் காட்டுமிராண்டித்தனமாக இருந்தது. எனவே, *1917*ஆம் ஆண்டில் ரஷ்யர்கள் அமைதி, உணவு மற்றும் நிலத்திற்காக ஏங்கினர். பூர்ஷ்வாகளின் ஜனநாயக பிப்ரவரி புரட்சி, ஜார் ஆட்சியை ஒழிப்பதற்கு மட்டுமே வழிவகுத்தது. மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, தொழிலாளர் வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்ட மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சி, குளிர்கால அரண்மனையில் புயலென புகுந்து கெரென்ஸ்கின் தலைமையிலான தற்காலிக அரசை தூக்கியெறிந்து, இருவகை அதிகாரத்திற்கும் முடிவுகட்டியது. சோவியத்தின் உழைக்கும் மக்கள், விவசாயிகள் மற்றும் வீரர்களுக்கு அனைத்து அதிகாரத்தையும் வரலாற்று ரீதியாக அளிப்பதாக அறிவித்தது.

சோவியத்துகளின் முதல் சட்டம் அமைதிக்கான தீர்மானம் ஆகும் – நவம்பர் 8ந் திகதி (ஒக்ரோபர் 26ந் திகதி) போரில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மற்றும் அவர்களது அரசாங்கங்களுக்கும் போர்நிறுத்தத்தை அறிவிக்கவும், போரை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை துவக்கக் கோரியும், எவ்வித நிபந்தனையுமின்றி ஜனநாயகபூர்வமான அமைதியை நிலைநாட்டக் கோரியும் அந்தத் தீர்மானம் அழைப்பு விடுத்தது.

பதினெட்டு மணி நேரத்திற்குள், லெனின் இரண்டாவது தீர்மானத்தை வெளியிட்டார் – ஏழை மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல். இந்த தீர்மானம் நிலத்தினை ‘சமூக சொத்து’ என்று அறிவித்தது – தனியார் சொத்துக்களை ஒழிக்க அழைப்பு விடுத்தது. இந்த நிகழ்வு முழு முதலாளித்துவ உலகத்தையும் உலுக்கியது அதேசமயம் புரட்சியாளர்கள், விவசாயிகள் மற்றும் வீரர்களால் வரவேற்கப்பட்டது – ஏனெனில், அது முழு மனிதகுலத்திற்கும் ஒரு புதிய சகாப்தத்தைத் திறந்துவிட்டது. அந்த சகாப்தம் மனிதமற்ற முதலாளித்துவக் கொடுமையை – மனிதனை மனிதன் சுரண்டும் சமூக அமைப்பை – ஒழித்துக் கட்டியது. அது ஒடுக்கப்பட்ட, காலனித்துவப்படுத்தப்பட்ட மற்றும் நசுக்கப்பட்ட மக்களுக்கும்

தேசியங்களுக்கும் புதிய வாய்ப்பைத் திறந்துள்ளது. அது காலனித்துவத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இந்தத் தீர்மானம் இந்தியா போன்ற பல மூன்றாம் உலக நாடுகளின் விடுதலைக்கு வழிவகுத்தது.

எனவே, மனிதர்களை மனிதர்கள் சுரண்டும் அமைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதை சாத்தியமாக்கியது. முதலாளித்துவத்தின் நுகத்தடியிலிருந்து விடுபட உழைக்கும் மக்களின் சித்தாந்தமான மார்க்சியத்தை நிரூபித்தது. எனவே, இது ஒரு சகாப்த நிகழ்வானது. ஒக்ரோபர் புரட்சியின் பொருத்தப்பாடு மட்டுமல்ல, மார்க்சியத்தின் பொருத்தப்பாடும் நிரூபிக்கப்பட்டது.

அதன்படி, உழைக்கும் வர்க்கத்தின் தலைமையிலான அரசு, மக்களின் நலனுக்காக செயல்படத் தொடங்கியது. உற்பத்திக் கருவிகள் அனைத்தும் – நிலம், உழைப்பு, மூலதனம் – அடுத்தடுத்த காலங்களில் சமூகமயமாக்கப்படுவதற்கு முன்னோடியாக, அரசு உரிமையின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டது. உற்பத்தியானது அனைத்து மக்களின் நுகர்வுக்காகவும், அவர்களின் தேவைகளுக்கு ஏற்பவும், அரசின் திட்டமிடலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. தனிப்பட்ட முதலாளிகளின் லாப வெறிக்காக அல்ல. இவ்வாறு சுரண்டல் இல்லாத சமூக ஒழுங்கு நிறுவப்பட்டது. அது உண்மையும் ஆனது.

ரஷ்யாவில் சோசலிசம் அடைந்த வேகமான முன்னேற்றமும், சிந்திக்க முடியாத சாதனைகளும் சோசலிச அமைப்பின் மேன்மையை உறுதிப்படுத்தியது. ஒரு காலத்தில் பின்தங்கியிருந்த ரஷ்ய சமூகம் ஒரு மிகப்பெரிய பொருளாதார சக்தியாக மாறியது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அரசாட்சியின் பாதை மாற்றப்பட்டது. ஏனெனில் சோசலிசம் மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தீர்மானிக்கும் காரணியாக மாறியது. சமூக நல அரசாங்கம் என்ற கருத்து முதலாளித்துவ நாடுகளிலும் செயல்படுத்தப்பட்டது.

சோவியத் சோசலிச குடியரசுகள் ஒன்றியம் பாசிசத்தை தோற்கடிப்பதில் வகித்த தீர்க்கமான பங்கும், அதன் காரணமாக கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகள் உருவானதும் உலக வளர்ச்சியில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இரண்டாம் உலகப் போரில் பாசிசம்/நாசிசத்தின் மீதான வெற்றி, முக்கியமாக சோவியத் செஞ்சேனை வகித்த தீர்க்கமான பங்கின் காரணமாக, காலனித்துவ சுரண்டலிலிருந்து நாடுகளை விடுவிக்க தேவையான தூண்டுதலை வழங்கியது. சீனப் புரட்சியின் வரலாற்று வெற்றி, வியட்நாமிய மக்களின் வீரம் மிக்க போராட்டம், கொரிய மக்களின் போராட்டம் மற்றும் கியூப புரட்சியின் வெற்றி உலக வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

சோசலிச நாடுகளின் சாதனைகள் – வறுமை மற்றும் கல்வியறிவின்மை ஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, ஓய்வூதியம் போன்ற துறைகளில் சமூக பாதுகாப்பின் பரந்த வலையமைப்பு – சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கும் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு அவர்களின் போராட்டங்களுக்கு சக்திவாய்ந்த நம்பிக்கையையும் உத்வேகத்தையும் வழங்கியது.

பாசிசத்தை தோற்கடித்த பின்னர் நடைபெற்ற சோசலிச புரட்சிகளின் வெற்றியைத் தொடர்ந்து, சோசலிசத்தின் வலிமையை மிகைப்படுத்தியும், முதலாளித்துவத்தின் வலிமை மற்றும் திறன்களை குறைத்தும் மதிப்பிடும் தவறான போக்கு நிலவியது.. உண்மையில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும், உலகில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளிலும் முதலாளித்துவம் நிலைத்திருந்த காரணத்தால், உற்பத்தி சக்திகள் மீது முதலாளித்துவத்தின் கட்டுப்பாடு உறுதியாக இருந்தது. மாறிய உலக ஒழுங்கிற்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக் கொண்டு, முதலாளித்துவம் தன்னைத் தானே வலுப்படுத்திக் கொண்டதுடன், சோசலிசத்திற்கு எதிராக இராணுவ, அரசியல், பொருளாதார மற்றும் கருத்தியல் பிரச்சாரங்கள் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஒரு கடுமையான தாக்குதலைத் தொடங்கியது.

உலக சோசலிச சக்திகள் இந்த ஏகாதிபத்திய சவாலை எதிர்கொண்டாலும், சோவியத் யூனியனில் சோசலிச கட்டுமானத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட சில தவறுகள் மற்றும் குறைபாடுகளால், அதன் உள்நாட்டு வலிமை பலவீனமடைந்தது. பின்னோக்கிப் பார்க்கும்போது நான்கு பகுதிகளில் குறிப்பிடத்தக்க குறைபாடுகளைப் பார்க்க முடியும்.

(அ) சோசலிசத்தின் கீழ் அரசின் வர்க்கத் தன்மை

(ஆ) சோசலிச ஜனநாயகம்

(இ) சோசலிசப் பொருளாதாரக் கட்டுமானம்

மற்றும்

(ஈ) கருத்தியல் விழிப்புணர்வைப் புறக்கணித்தல்.

சோசலிசம் மனித முன்னேற்றத்தின் ஒரு அறியப்படாத பாதையில் ஈடுபட்டுள்ளது என்பதை அழுத்தமாக குறிப்பிட வேண்டியது அவசியம். சோசலிசக் கட்டுமானத்திற்கான எந்தவிதமான திட்டமோ அல்லது குறிப்பிட்ட சூத்திரங்களோ நம்முன் இல்லை.

இந்த குறைபாடுகளால், சோசலிசத்தை அகற்ற, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு எதிர் புரட்சிகர சக்திகள் இணைந்து செயல்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, சோசலிசத்தில் ஏற்பட்ட இந்த பின்னடைவுகள் மார்க்சிய–லெனினியத்தின் அடிப்படை கொள்கைகளின் குறைபாட்டின் காரணமாக ஏற்படவில்லை. மாறாக, அவை முதன்மையாக மார்க்சியம்–லெனினிசத்தின் அறிவியல் மற்றும் புரட்சிகர உள்ளடக்கத்தில் இருந்து விலகியது; உலக முதலாளித்துவத்தின் மற்றும் சோசலிசத்தின் ஒப்பீட்டு வலிமைகளைப் பற்றிய தவறான மதிப்பீடுகள்; படைப்பு அறிவியலான மார்க்சியத்தை குறித்த முரட்டுத்தனமான மற்றும் இயந்திரத்தனமான விளக்கம்; சோசலிசக் கட்டுமானத்தின்போது ஏற்பட்ட முக்கிய குறைபாடுகள் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ளன. எனவே, இந்த பின்னடைவுகள் உழைக்கும் வர்க்கத்தின் சித்தாந்தம் – அதாவது மார்க்சியம்–லெனினிசம் அல்லது சோசலிச இலட்சியத்தையோ மறுப்பதாக அமையவில்லை.

ஒக்ரோபர் புரட்சியின் விளைவுகளான சோவியத் யூனியன் அல்லது கிழக்கு ஐரோப்பிய யூனியன் இப்போது இல்லை. சோசலிசத்திற்கு இந்த பின்னடைவு ஏற்பட்ட போதிலும், ஒக்ரோபர் புரட்சியின் பொருத்தப்பாடு இன்றளவும் உள்ளது.

பின்வருவனவற்றில் அது நமக்கு வழிகாட்டுகிறது:

அ) இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முதலாளித்துவத்திற்கு தாமதமாக மாறும் நாடுகளில், இனி நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான முதலாளித்துவ ஜனநாயக புரட்சியை

நிறைவு செய்ய முடியாது என்ற புரிதலுக்கு இந்த நாடுகளில் புதிதாக உருவாகிய முதலாளித்துவ வர்க்கம் வந்தது. நிலப்பிரபுத்துவ சொத்து மீதான எந்தவொரு தாக்குதலும் முதலாளித்துவ சொத்து மீதான தாக்குதலாக மாறலாம் என்ற அச்சத்தால் அவர்கள் புதிய சூழ்நிலையை எதிர்கொண்டனர். எனவே, அவர்கள் பழைய நிலப்பிரபுத்துவ அமைப்புடன் சமரசம் செய்து கொண்டனர். நிலப்பிரபுத்துவத்தின் பிடியிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்காக, முடிக்கப்படாத முதலாளித்துவ ஜனநாயக புரட்சியின் பணியை முன்னெடுத்துச் செல்லும் பணி, அதன் ஒப்பீட்டு அளவு சிறியதானாலும், வரலாற்று அரங்கில் தாமதமாகத் தோன்றியதாக இருந்தபோதிலும், பாட்டாளி வர்க்கத்தின் தோள்களில் விழுந்தது.

இது உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் ஒரு தொழிலாளி–விவசாய கூட்டணியின் அவசியத்தை உருவாக்கியது. லெனின் கூறியது போல், "எதேச்சதிகாரத்தின் எதிர்ப்பை நசுக்கி, முதலாளித்துவத்தின் நிலையற்ற தன்மையை முடக்குவதற்காக, விவசாயிகளின் பெரும்பகுதியை தன்னுடன் இணைத்து, ஜனநாயக புரட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். முதலாளித்துவத்தின் எதிர்ப்பை நசுக்கி, விவசாயிகள்,சிறு முதலாளிகளின் நிலையற்ற தன்மையை முடக்குவதற்காக, மக்கள்தொகையில் அரைப்பாட்டாளிகளாக உள்ள பெரும்பகுதியை தன்னுடன் இணைத்து, சோசலிச புரட்சியை நிறைவேற்ற வேண்டும்."

இது விசயத்தில் பேராசிரியர் பிரபாத் பட்நாயக்கின் வார்த்தைகளை நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்… "பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி–விவசாய கூட்டணி அமைய வேண்டும் என்ற இந்த கருத்து, ஜனநாயக புரட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து சோசலிசத்துக்குச் செல்வது மட்டுமல்ல. மார்க்சிய கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒரு அடிப்படை முன்னேற்றத்தை அது குறிக்கிறது. முதலில், இது விவசாயிகளை நோக்கிய பார்வையில் ஒரு மாற்றமாக அமைந்தது. தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கக்கூடிய புரட்சிகர சக்திகளின் வரிசையில் விவசாயிகளை உள்ளடக்கியதாக இருந்தது."

இந்தியா போன்ற, ஒப்பீட்டளவில்



பின்தங்கிய நாடுகளில், எந்தவொரு புரட்சியின் வெற்றியும், உழைக்கும் வர்க்கம்–விவசாய கூட்டணியை உருவாக்கி வலுப்படுத்துவதன் மூலம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். லெனின் தனது புரட்சிகர நடைமுறைகளில் இந்த அம்சங்களை தெளிவாக எடுத்துக்காட்டினார். எனவே, உழைக்கும் வர்க்கத்தின் தலைமையின் கீழ் உழைக்கும் வர்க்கம்–விவசாய கூட்டணி என்பது வெறும் முழக்கமோ அல்லது வெற்று சொற்களோ அல்ல. சமூக மாற்றத்துக்காக தற்போதைய புரட்சியாளர்களின் கைகளில் உள்ள ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும்.

ஆ) முன்னதாக, சோசலிசத்தை நோக்கிய மாற்றம் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் மட்டுமே நடைபெறும் என்ற கருத்து இருந்தது. லெனின், முதலாளித்துவத்தின் வளர்ச்சியை நிர்வகிக்கும் விதிகளின் அடிப்படையில், அப்போது நிலவிய சமகால உலக பொருள் நிலைமைகளை பகுப்பாய்வு செய்து, ஏகாதிபத்தியம் குறித்த தனது கோட்பாட்டை உருவாக்கினார். இவர் நிதி மற்றும் தொழில் துறைகளில் மூலதனத்தின் குவிப்பு மற்றும் மையப்படுத்தல் விதிகளை கவனித்தார். முதலாளித்துவத்தின் கீழ் இந்த இயல்பான போக்கு இரண்டு துறைகளிலும் ஏகபோகத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இறுதியில் ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்தது. லெனின், ஒக்ரோபர் புரட்சி மூலம், ஏகாதிபத்திய சங்கிலிகளில் மிகவும் பலவீனமான இணைப்பை உடைத்தார் – அதுதான் ரஷ்யா. அப்போது ஒப்பீட்டளவில் பின்தங்கிய பொருளாதாரமாக ரஷ்யா இருந்தது.

தோழர் சீதாராம் யெச்சூரி கூறுகிறார்: "லெனின் பின்தங்கிய பொருளாதாரத்தை சோசலிசத்திற்கான மாற்றத்திற்குத் தயார்படுத்த படிப்படியான புரட்சிக் கோட்பாட்டை முன்வைத்தார். ஒக்ரோபர் புரட்சி அனுபவத்திலிருந்து உருவான புரட்சியின் ஜனநாயக கட்டமும், சோசலிச கட்டத்திற்கான அதன் மாற்றமும் தற்போதைய சூழலில் நமக்கு தொடர்ந்து பொருத்தமாக இருக்கிறது."

இ) இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு – உலகளாவிய முதலாளித்துவத்தின் அமைதியான பெருக்கத்தின் காரணமாக, மூலதன குவிப்பு புதிய உயரத்தை எட்டியுள்ளது. சோசலிசத்தின் பின்னடைவால் இந்த குவிப்பு மென்மேலும் அதிகரித்துள்ளது. சோவியத் யூனியன் உட்பட முன்னாள் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகள் அனைத்தும் முதலாளித்துவத்தின் கட்டுப்பாட்டில் வந்தன. இது சர்வதேச நிதி மூலதனம் புதிய உயரத்தை எட்டவும், ஒருங்கிணைக்கவும் வழிவகுத்தது. இந்த புதிய சூழ்நிலையில், சர்வதேச நிதி மூலதனம் உலகெங்கிலும் தடையின்றி நகர்வதற்கான சுதந்திரத்தை விரும்பியது. அதன் முயற்சிகளில் வெற்றியும் பெற்றது. அந்த வகையில் உலகமயமாக்கல் முறை உருவானது.

உலகமயமாக்கலின் இப்போதைய காலகட்டம் மூலதன குவிப்பை மேலும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல வழிவகுத்து வருகிறது. இது சர்வதேச நிதி மூலதனத்தின் மேலாதிக்கத்திற்கு பாதை சமைத்தது. சர்வதேச நிதி மூலதனத்தின் கட்டளைகளின் கீழ், இலாபத்தை அதிகரிப்பதற்கான விதத்தில், உலகத்தை மறுசீரமைப்பதுதான் நவீன தாராளவாதத்தின் உள்ளடக்கம் ஆகும். இது அனைத்து தேசிய அரசுகளும் ஒரு வகையில் அல்லது மற்றொரு வகையில் நிதி மூலதனத்தின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அவை சர்வதேச நிதி மூலதனத்தால் ஆதரிக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். உலகம் இப்போது உலகமயமாக்கப்பட்ட நிதியின் சுழலில் சிக்கித் தவிக்கிறது. இது தேசிய

அரசின் தன்மையையும் மாற்றியுள்ளது. இது மக்களின் நலனுக்கு சேவை செய்யாது. மாறாக நிதி மூலதனத்தின் இலாப அதிகரிப்பு நலனுக்கு சேவை செய்யும். முதலாளித்துவத்தின் இந்த கொள்ளையடிக்கும் தன்மை, உழைக்கும் மக்களுக்கு அதிக துன்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கடுமையாக அதிகரித்துள்ளது. முதலாளித்துவத்தின் இந்த இயல்பான போக்கு முதலாளித்துவத்தின் தொடர்ச்சியான நெருக்கடிகளால் விளைகிறது.

இப்போது முதலாளித்துவத்தின் வெற்றிக்களிப்பு முடிவடைந்துள்ளது. முதலாளித்துவம் நீண்ட நெடிய அமைப்பு நெருக்கடியின் கட்டத்தில் நுழைந்துள்ளது. அதிகரித்து வரும் அதிருப்தி உலகம் முழுவதும் பாசிச அரசியல் வலதுசாரிகள் உருவாவதற்கான வளமான தளத்தை வழங்கியது. மக்களின் கோபத்தையும் அதிருப்தியையும் திசைதிருப்ப முதலாளித்துவத்தின் அரசியல் கருவியாக இது உள்ளது. இந்த அனைத்து போக்குகளும் நமக்கு சவால்களையும் வாய்ப்புகளையும் அளித்துள்ளன. முதலாளித்துவம் மக்களுக்கு ஆறுதல் அளிக்க முடியாது என்பது நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. சோசலிசம் மட்டுமே மாற்று!

லெனின் கூறினார்: "நாங்கள் தொடங்கிவிட்டோம். எப்போது, எந்த திகதி மற்றும் நேரத்தில், எந்த நாட்டின் புரட்சிகர தொழிலாளர்கள் இந்த செயல்முறையை நிறைவு செய்வார்கள் என்பது முக்கியமல்ல. முக்கியமான விஷயம் என்னவென்றால், பனிமலை உடைக்கப்பட்டுள்ளது, சாலை திறக்கப்பட்டுள்ளது. வழி காட்டப்பட்டுள்ளது".

மாபெரும் ஒக்ரோபர் புரட்சியின் 106வது ஆண்டு நிறைவையொட்டி, முதலாளித்துவத்தை தாண்டிச் செல்வதன் மூலம் மனிதகுலத்தைக் காப்பாற்றி முன்னேற உறுதியெடுப்போம்.

மாபெரும் ஒக்ரோபர் புரட்சி நீடூழி வாழ்க!

**தமிழில்: எம். வி. எஸ். மணியன்**

# ஊடகவியலாளர் கொன்ஸாலோ லிரா உக்ரைன் சிறையில் மரணம்

ஊடகவியலாளர் கொன்ஸாலோ லிரா (Conzalo Lira) உக்ரைன் சிறையில் 12.01.2024 அன்று மரணமடைந்தார். இவர் பெப்ரவரி 29, 1968 இல் அமெரிக்காவில் பிறந்தார். இவரது பெற்றோர் சிலியை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை பெப்ரவரி, 2022 இல் ஆரம்பித்தபோது இவர் உக்ரைன் தலைநகர் கீயவ்வில் (Kyiv) இருந்தார். அங்கிருந்து கொண்டு போர் பற்றிய செய்திகளை Youtube வாயிலாக தெரிவித்து வந்தார். பின்னர் உக்ரைனின் நகரமான கார்கிவ்விற்கு (Kharkiv) இடம்பெயர்ந்து அங்கிருந்து கொண்டும் Youtube இல் போர் நிலைமைகளை உடனுக்குடன் ஒளிபரப்பி வந்தார். அத்துடன் அரசியல் ஆய்வுகளுக்காக பல ஊடகவியலாளர்களுடன் இணைந்துள்ளார். இவரது சமூக, அரசியல் கண்ணோட்டங்களுக்காக இவர், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும்



ரஷ்ய–சீன சார்புடையவரென்ற பெயரை சம்பாதித்துக் கொண்டார்.

கொன்ஸாலோவின் Youtube இனை பல்லாயிரக்கணக்கானோர் பார்வையிடுவதைக் கண்டு சீற்றமுற்ற உக்ரைன் புலனாய்வுப் பிரிவு இவரை பல தடவை விசாரித்தது. பின்னர் இரண்டு தடவை கைது செய்து விடுவித்தனர். மூன்றாந்தடவை கடந்த வருடம் மே மாதம் கைது செய்து பல மாதங்களாக சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர்.

உக்ரைன் புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்புச் சிறையிலிருந்து தப்பிய கொன்ஸாலோ ஹங்கேரி நாட்டு எல்லையில் வைத்து கைது செய்யப்பட்டு மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார். இவர் ஹங்கேரி எல்லையைக் கடக்கும் சமயத்தில், தனக்கு எதுவும் நேரலாம் என்ற பரபரப்பான செய்தியை ஓகஸ்ட் 1, 2023 Youtube இல் வெளியிட்டிருந்தார். இதனை 2 இலட்சத்து 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பார்வையிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிற்கு வெளியே, அமெரிக்கப் பிரசைகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதுவும் நேர்ந்தால் தனது ராஜதந்திரங்களை பிரயோகித்தும், அவசியமேற்பட்டால் இராணுவப்பலத்தால் எச்சரிக்கைகளை விடுவித்தும், அவர்களை விடுவிக்கும் அமெரிக்கா, அமெரிக்க ஊடகவியலாளர் கொன்ஸாலோ லிரா விடயத்தில் எதுவுமே செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் வீடற்றவர் தொகை அதிகரிப்பு!




**அ**மெரிக்கர்களில் கூடுதலான மக்கள் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு வீடற்றவர்களாக மாறியிருக்கிறார்கள் என அமெரிக்க வீடு மற்றும் நகர அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

2023 ஜனவரியில் அமெரிக்காவில் வீடற்றவர்களின் தொகை 653,104 என கணிக்கப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டை விட 12 சதவிகிதம் அதிகமானதாகும். பணவீக்க அதிகரிப்பு, வீடுகளின் வாடகை ஏற்றம் என்பவை பலரை வீடற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. இவ்வாறு வீடற்றவர்களில் மூன்றிலொரு பகுதியினர் தகுந்த தங்குமிடம் இன்றி அவதியுற்று வருகின்றனர். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இந்த வீடற்ற மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துள்ளனர். இவர்களில் பலர் அந்தக் காலகட்டத்தில் இறந்தும் போயினர்.

மக்களின் வருமானம் 2001 – 22

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# புதிய ‘அரகலய’வை தடுக்க நடவடிக்கை வேண்டும்!




ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸவை பதவி துறக்கக் கோரி ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை மீதும், அரசாங்கக் கட்டிடங்கள் மீதும் தாக்குதல் நடத்தியதை அடுத்து அவர் 2022 யூலையில் நாட்டை விட்டு வெளியேறினார். நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக உணவுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு அதனால் வன்முறைகள் அதிகரித்ததால் ஜனாதிபதி கோத்தபாய நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்போதைய பிரதமர் விக்கிரமசிங்கவையும் பதவி விலகக் கோரியதுடன், அவரது சொந்த வீட்டையும் தீயிட்டுக் கொளுத்தினர். பிரதமர் அலுவலகம் மீது ஆர்ப்பாட்டத்தின் போது தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அது பின்னர் வன்முறையாக மாறியது. ராஜபக்ஸ 2022 யூலை 14 இல் பதவி விலகியதை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர்.

ஒக்ரோபரில் உணவு வீக்கம் 85.6 சத வீதமாக இருந்தது. இதன் அர்த்தம் மக்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் அடிப்படைத் தேவைகளை அடைய முடியாமல் இருந்தனர் என்பதாகும். உலக உணவுத் திட்டம் (World Food Program) வெளியிட்ட தகவலின்படி 32 சத வீதமான மக்கள் உணவுப் பாதுகாப்பு இல்லாமல் இருந்ததுடன், 68 வீதமான மக்கள் தமது உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலும் இருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சடுதியாக விவசாய இரசாயனங்களின் இறக்குமதிக்குத் தடை விதித்ததால், 2021 – 22 காலபோகத்தின் போதும், 2022 சிறுபோகத்தின் போதும் விவசாய உற்பத்தி முறையே 40 வீதத்தாலும், 50 வீதத்தாலும் குறைவடைந்தது. இது விவசாயிகள் தமது நிலங்களை விட்டு வெளியேறி வீதிக்கு வர வைத்தது.

யுனிசெப்பின் (Unicef) கணிப்பின்படி 2.3 மில்லியன் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்பட்டதுடன், இவர்களில் 56,000 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். புதிய ஜனாதிபதி நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பது மற்றும் ஆர்ப்பாட்டங்களால் ஏற்பட்ட வன்முறையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது போன்ற கடமைகளை எதிர்நோக்க வேண்டி வந்தது.

இருந்தபோதிலும், புதிய ஜனாதிபதி பதவியேற்ற சில மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் (International Monetary Fund) பேச்சுவார்த்தை நடத்தி கடன் மறுசீரமைப்புக்காக 2.9 பில்லியன் டொலர்களைப் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன் இந்தியாவிடம் இருந்து கிடைத்த 2 பில்லியன் கடன் வசதி காரணமாகவும் தற்காலிகமாக அந்நிய செலாவணிப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு, கடைகளில் காணாமல் போயிருந்த அத்தியாவசியப் பொருட்களும் ஒரு குறிப்பிட்ட அளவு காட்சியளிக்கத் தொடங்கின. பெற்றோலியப் பொருட்களுக்கு நிலவிய தட்டுப்பாடும் ஓரளவு நீங்கியது.

விக்கிரமசிங்க உணவு நெருக்கடியைத் தளர்த்தியதன் மூலம் ஆர்ப்பாட்டங்கள் தணிந்தது. இருந்தாலும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் தேர்தல் சம்பந்தமான புதிய நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது. தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரி வருகின்றனர். பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி இரு தேர்தல்களும் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இன்று நமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டு, நாடு பட்டினி நிலைமையினின்றும் விடுபட்டிருந்தாலும், பிரச்சினை முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு மூன்று வேளை உணவையும் உட்கொள்வதற்கு 120,000 ரூபா தேவையென்று புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், நாட்டில் ஒரு குடும்பத்தின் சராசரி மாத வருமானம் 60,000 ரூபாவுக்கும் குறைவாகவே இருக்கின்றது!

சுகாதார அமைச்சின் குடும்ப நல அமைப்பினதும், ஊடகங்களின் தகவல்களின்படியும், 2023 இல் 5 வயதுக்குட்பட்ட 15,000 சிறுவர்கள் கடுமையான போசாக்குப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருந்தாலும் இத்தொகை 2022 இல் பதிவானதை விடக் குறைவானதாகும். அதேநேரத்தில், 2022 இல் 15.3 சத வீதமாக இருந்த 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் நிறை, 2023 இல் 17.1 வீதமாக அதிகரித்துள்ளது. நுவரெலியாவில் இந்த வீத அதிகரிப்பு 26.4 ஆக உள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் 2022 செப்ரெம்பரில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் பொருளாதார

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

16ம் பக்கத்தொடர்ச்சி...

ராமர் சிலையும் கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி உள்ளிட்ட எந்த வரலாற்று ஆவணத்திலும் அங்கு ராமர் கோவில் இருந்ததாக பதிவுகள் இல்லை.

ராம ராஜ்ஜியம் என்பதை தான் கண்ட கிராம சுய ராஜ்ஜியத்துடன் இணைத்து பார்த்தார் காந்தி. வெளிநாட்டு உதவிகளை தவிர்ப்பது, பெரும் தொழில்களை தவிர்த்து சிறு, குறுந்தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது, வெளி முதலீடு தேவையில்லாத தொழிலாக விவசாயத்தை பேணுவது, ஏற்றுமதி, இறக்குமதி வணிகத்தை பெருமளவு தவிர்ப்பது, இராணுவச் செலவை குறைத்து அண்டை நாடுகளுடன் நட்பு பாராட்டுவது, தனி மனித சுதந்திரமும், சமூக சுதந்திரமும் உத்திரவாதப் படுத்தப்பட்ட ராஜ்ஜியமே ராம ராஜ்ஜியம் என காந்தி கூறியுள்ளார்!

மேற்குறிப்பிட்ட அனைத்துக்கும் எதிராக தற்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் கட்சி தான் பா.ஜ.க. வெளிநாட்டுக் கடன்களை 100 இலட்சம் கோடிகள் என்ற உச்சத்திற்கு கொண்டு போயுள்ள ஆட்சி தான் பா.ஜ.க ஆட்சி. சிறு, குறுந்தொழில்களை அழித்து, அதானி, அம்பானி போன்ற வெகுசில கோர்ப்பரேட்டுகளிடம் தேசத்தின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தையும் அடகு வைத்துள்ள ஆட்சி தான் பா.ஜ.க அரசு! இராணுவச் செலவை ஆண்டுக்காண்டு பிரம்மாண்டமாக அதிகப்படுத்தி வரும் ஆட்சியே பா.ஜ.க ஆட்சி! நாட்டை எப்போதும் வன்முறைக் களமாகவும், பதட்டத்திலும் வைத்திருக்க விரும்பும் ஆட்சியே பா.ஜ.க ஆட்சி! எல்லாவற்றுக்கும் மேலாக எல்லோரையும் சமமாக பாவிக்க முடியாத ஆட்சியே பா.ஜ.க ஆட்சி!

ராம நவமி என்ற பெயரில் நடத்தப்படும் மதவெறி ஊர்வலங்களை காந்தி எப்போதாவது ஆதரித்து உள்ளாரா? 1923 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் நடந்த ராம நவமி விழாக்களில் வெடித்த வன்முறைகளை எவ்வளவு கண்டித்து பேசியுள்ளார் என்பது வரலாற்றில் பதிவாகியுள்ளது.

பா.ஜ.கவின் அரசியல் தலைமை பீடமான 'இந்து ஸ்வயம் சேவக் சங்கம்' என்ற பெயரில் செயல்படும் ஆர்.எஸ்.எஸூம், அதன் கிளை அமைப்புகளான 12 அமைப்புகளும் பேசுவது என்ன? சாவர்க்கர் முன்வைத்த இந்து பண்பாட்டு தேசியம்! ஒற்றைப் பண்பாட்டை பொதுமையாக்கும் இராணுவ மயப்பட்ட தேசியம்! காந்தி விரும்பியதோ பல பண்பாடுகளை உள்ளடக்கிய பன்மைத்துவமுள்ள தேசியம்!

கோவிலை அரசியல் வெற்றியாக கருதுவதே பிழையானது. அந்த அரசியல் வெற்றிக்காக முழுப் பணிகளையும் முடிக்காமல் அரைகுறையாக உள்ள நிலையில் அவசரமாகத் திறப்பது மிகத் தவறானது! அதையும் பிரதமர் மோடியைக் கொண்டே ராமர் சிலையை பிரதிஷ்டை செய்தால் தான் இந்து வாக்கு வங்கி பலமாகும் என அரசியல் கணக்கு போடுகிறீர்களே! என்னே அறியாமை! என்னே ஆணவம்! இந்திய மக்கள் வேறு கணக்கு போட்டு வைத்திருந்தால், அப்போது உணர்வீர்கள் உங்கள் அறியாமையையும், ஆணவத்தையும்!

டெல்லி அருகே 2005 இல் நாராயணனின் அக்சர்தம் கோவில் இந்தியாவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் தவிர்க்க முடியாத இடமாகக் கருத வேண்டும் என்ற நோக்கத்தில் மிகப் பெரும் ஆடம்பரமாக உருவாக்கப்பட்டது., ஒரு மாபெரும் சுற்றுலா தளம் போல நீர் ஊற்றுக்கள், திறந்த வெளியில் பெரும் தோட்டம், நவீன திரை அரங்கம், கருத்தரங்கு மண்டபங்கள்.. உணவகங்கள், படகோட்டும் வசதிகள் மற்றும் பிற பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய இடமாக தற்போதைய அயோத்தி கோவில் போலவே உருவாக்கப்பட்டது. இந்தியாவிற்கு விஜயம் செய்த அமெரிக்க அதிபரே இந்தக் கோவிலின் பிரம்மாண்டத்தைக் கண்டு அசந்து போனதாகச் சொன்னார்!

ஆனால், என்னவாயிற்று? 2009 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் நினைவுச் சின்னத்துக்கு உள்ளே மின்சாரக் கசிவு காரணமாக ஏற்பட்ட தீவிபத்தில் 11 அடி உயரமான சுவாமி நாராயணன் சிலை உட்பட, ஆறு உலோகச் சிலைகள் கருகி சேதமாகின. இந்த ஆறு சிலைகளும் மரத்தாலான பீடத்தில் வைக்கப்பட்டிருந்த காரணத்தால், அப்பீடம் தீக்கு இரையாகியது. சிலைகள் தலைகீழாகக் கவிழ்ந்து, நடைபாதையில் உருண்டு சேதராமாகின. அன்றிலிருந்து நினைவுச் சின்னம் மூடப்பட்டுள்ளது! மற்றபடி இது ஒரு மிகப் பெரும் சுற்றுலா தளமாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை!

அதே போல அயோத்தியும் வருங்காலத்தில் மக்களை கவரும் மிகப் பெரும் சுற்றுலா தலமாகலாம்! உண்மையான இறை நம்பிக்கையாளர்களுக்கு அயோத்தியில் ஒன்றும் இல்லை. பேரழிவுகளாலும், பெரும் கலவரங்களாலும், அரசியல் நோக்கங்களாலும் ஆன்மீகத் தளங்கள் உருவாவதில்லை. மத நம்பிக்கைகளைக் கடந்த அன்பிலும், அர்ப்பணிப்பிலும் உருவாவதே ஆன்மீகத் திருத்தலமாகும்! பா.ஜ.க ஆட்சியாளர்கள் தன்னை கடவுளாக நினைக்கிறார்களா? அல்லது தங்கள் அரசியல் வெற்றிக்கான கருவியாக கருதுகிறார்களா? என்பதை அந்த ராமர் இன்னும் கூடவா அறியாமல் இருப்பார்?

---

9ம் பக்கத்தொடர்ச்சி...

காலகட்டத்தில் 4.3 வீதம் மட்டுமே அதிகரித்த அதேநேரத்தில், வீட்டு வாடகை 18.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. பொதுவாக ஒரு அமெரிக்கர் தமது வருமானத்தில் 30 வீதத்தை வீட்டு வாடகையாகச் செலுத்தவேண்டி உள்ளது. மறுபக்கத்தில் வீடுகளின் விலைகளும் கடுமையாக அதிகரித்துள்ளன.

“அமெரிக்க மத்திய அரசாங்கம் வீடற்றவர்களினதும், குறைந்த வருமானம் உள்ளவர்களினதும் வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக போதிய நிதியை ஒதுக்கிச் செயற்படாவிடின், இந்த நாட்டில் நிலைமை மேலும் மோசமான கட்டத்தை அடையும்” என, வீடற்றவர்கள் சார்பாக வாதிடும் Diane Yentel என்பவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

---

அரசு என்பது ஒரு வர்க்கம் (முதலாளி) மற்றொரு வர்க்கத்தை (தொழிலாளி) ஒடுக்குவதற்கான அமைப்பே. நாடாளுமன்றம் என்ற முகமூடி தரித்து, வர்க்கங்களுக்கு இடையிலான மோதலை மட்டுப்படுத்தி, இந்த ஒடுக்குமுறையை சட்டரீதியானதாக ஆக்கி அதை நிலையானதாக்குவதே அரசு.

---

(முதலாளித்துவ ஜனநாயகத்தில்) சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒடுக்கும் வர்க்கத்தின் எந்த குறிப்பிட்ட பிரதிநிதிகள் தங்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தலாம், தங்களை ஒடுக்கலாம் என்பதை தீர்மானிப்பதற்கு ஒடுக்கப்படுவோரால் அனுமதிக்கப்படுகிறார்கள்.

**-லெனின்**

# பலஸ்தீன மக்களுக்கு நீதி கிடைக்குமா?

தென் ஆப்பிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு பரவலாக உலக நாடுகளின் கவனத்தை பெற்றுள்ளது. நெதர்லாந்தின் 'தி ஹேக்' (The Hague) நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் ஜனவரி 11ந் திகதி தென் ஆப்பிரிக்காவும் 12ந் திகதி இஸ்ரேலும் தமது வாதங்களை முன்வைத்தன. இந்த வழக்கின் மையமான அம்சம் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளது என்பதாகும். இது குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கு ஆண்டுகள் பல ஆகும். அதற்குள் பலஸ்தீனம் அழிக்கப்பட்டுவிடும். எனவே இடைக்கால தீர்ப்பு தரும்படியும், அதன் மூலம் காஸா போரை உடனடியாக இஸ்ரேல் நிறுத்த வேண்டும் எனவும், காஸா மக்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்பட வேண்டும் எனவும் தென் ஆப்பிரிக்கா தனது வாதத்தில் வற்புறுத்தியுள்ளது.

இடைக்கால தீர்ப்பு வருமா? பலஸ்தீன மக்கள் நீதி பெறுவார்களா? என்பது சில வாரங்களில் தெரியும். சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice - ICJ) ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்துக்கு 15 நீதிபதிகள் ஐ.நா. பொதுச்சபையால் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மேலும் வழக்கு தொடுக்கும் மற்றும் அந்த வழக்கை சந்திக்கும் தேசங்கள் சார்பாக இரு நீதிபதிகள் அந்த வழக்கு முடியும் வரை தற்காலிகமாக நியமிக்கப்படுவார்கள்.

**தென் ஆப்பிரிக்காவின் வாதம்!**

தென் ஆப்பிரிக்கா சிறப்பான தயாரிப்புகளுடன் தனது வாதங்களை முன்வைத்தது. ஒரு தேசம் இனப் படுகொலையில் ஈடுபடுகிறது என்பதை நிரூபிப்பதற்கு:

1. இனப்படுகொலை செய்யப்பட்டது.

2. இனப்படுகொலை செய்வதற்கான நோக்கம்.

ஆகிய இரண்டு குற்றங்களும் நிரூபிக்கப்பட வேண்டும். இனப்படுகொலை செய்ததற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க முடியும். ஆனால் இனப்படுகொலைக்கான நோக்கம் முன்கூட்டியே இருந்தது என்பது நிரூபிப்பது மிகவும் கடினமான செயல். இஸ்ரேல் விஷயத்தில் அந்தக் கடினம் தென் ஆப்பிரிக்காவுக்கு இருக்கவில்லை. அந்த பணியை



சர்வதேச நீதிமன்ற வாயிலில் தென் ஆபிரிக்கா சட்ட நிபுணர்கள் குழு

இஸ்ரேல் சுலபமாக்கிவிட்டது.

தென் ஆப்பிரிக்கா சார்பாக நீதி அமைச்சர் ரொனால்ட் லமோலா (Ronald Lamola) கீழ்கண்ட வாதங்களை முன்வைத்தார்:

- பலஸ்தீனர்கள் காஸாவில் 75 ஆண்டு இன ஒதுக்கலும் 54 ஆண்டுகள் ஆக்கிரமிப்பையும் 13 ஆண்டுகள் முற்றுகையையும் சந்தித்து வருகின்றனர்.
- இந்த அநீதியும் வரலாறும் ஒக்ரோபர் 7ந் திகதி ஹமாஸின் தாக்குதலுடன் தொடங்கவில்லை.
- தென் ஆப்பிரிக்கா கேட்பது உடனடியாக ஓர் இடைக்கால தீர்ப்பு.

அதற்காக இனப்படுகொலை குறித்து அனைத்து அம்சங்களும் உடனடியாக முன்வைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதனை பின்னர் தென் ஆப்பிரிக்கா நிச்சயமாக முன்வைக்கும்.

அடுத்து டொக்டர் அடிலா ஹஷிம் (Adila Hassim) எனும் பெண் வழக்கறிஞர், இஸ்ரேல் ஏற்றுக்கொண்டுள்ள இனப்படுகொலை தடுப்பு உடன்படிக்கை II a/b/c/d ஆகிய பிரிவுகளை இஸ்ரேல் மீறியுள்ளது என குற்றம்சாட்டினார். அந்த பிரிவுகள்:

அ) ஒரு குழுவின் உறுப்பினர்களை கொலை செய்வது.

ஆ) அந்த குழுவின் உறுப்பினர்களுக்கு உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக துன்பங்களை உருவாக்குதல்.

இ) முழுமையாகவோ, பகுதியாகவோ அந்த குழுவை அழிப்பதற்கான சூழல்களை திட்டமிட்டு திணிப்பது.

ஈ) இந்த குழுவுக்குள் குழந்தை பிறப்பதை தடுக்கும் நோக்கத்துடன் நடவடிக்கைகளை திணிப்பது.

23,200 காஸா மக்கள் படுகொலை செய்யப்பட்டது, அதில் 70 சதவீதம் குழந்தைகள் மற்றும் பெண்கள், 7,000 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர், 200 தடவைக்கு அதிகமாக உலகிலேயே அதிக எடை கொண்ட 2000 இறாத்தல்கள் (450 கிலோ) குண்டுகளை வீசியது, 60,000 பேர் படுகாயம், 3,35,000 வீடுகள் அழிப்பு என வாஷிம் ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே போனார். பெரும்பாலும் அவர் ஐ.நா. வெளியிட்ட ஆதாரங்களையே முன்வைத்தார். அமைதியான, ஆனால் உறுதியான குரலில் வாதங்களை வைத்த அவர், குழந்தைகள் படுகொலை பற்றி பேசும் பொழுது துக்கம் மேலிட்டுத் தடுமாறினார். இதனை நீதிபதிகள் அவதானிக்கத் தவறவில்லை.

**அமலேக்குகள் (Amalekites)**

அடுத்ததாக வழக்கறிஞர் டெம்பேக்காவின் (Tembeka Ngcukaitobi) வாதம் முக்கியமாக இனப்படுகொலைக்கான நோக்கம் இஸ்ரேலுக்கு இருந்தது என்பதை மையமாக கொண்டிருந்தது. "மனித மிருகங்கள்" என காஸா மக்களை இஸ்ரேல் இராணுவ அமைச்சர் கூறியது, காஸா மக்கள் அனைவரும்

ஹமாஸ் பயங்கரவாதிகள் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என பல இஸ்ரேலிய அமைச்சர்கள் பேசியதை காணொலி ஆதாரங்களுடன் அவர் முன்வைத்தார்.

அவரது வாதத்தின் மிக முக்கிய அம்சம் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகுவின் உரை ஆகும். அவர் இஸ்ரேல் மக்களுக்கு உரையாற்றும் பொழுது, காஸா மக்கள் “அமலேக்குகள்” எனவும் அமலேக்குகளை என்ன செய்ய வேண்டும் என கடவுள் சொன்னாரோ அதனை செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

பைபிள் பழைய ஏற்பாட்டில் யூதர்களின் நிலத்தை அமலேக்குகள் எனப்படுபவர்கள் பறித்துக் கொள்வதாகவும், அவர்களிடமிருந்து நிலத்தை மீட்க அனைத்து அமலேக்குகள் ஆண்கள்/பெண்கள்/குழந்தைகள் அனைவரையும் கொன்று விடும்படியும் கடவுள் கூறியதாக உள்ளது. அது போல நாம் பலஸ்தீனர்களை கொன்றுவிட வேண்டும் என பகிரங்கமாக நேதன்யாகு கூறினார்.

இதனை டெம்பேக்கா ஆதாரத்துடன் முன்வைத்தார். மேலும் இத்துடன் டெம்பேக்கா நிற்கவில்லை. காஸா பகுதிக்குள் சென்ற இஸ்ரேல் இராணுவ வீரர்கள் பலஸ்தீனர்களை கொன்ற பிறகு அல்லது கட்டிடங்களை தகர்த்த பிறகு, “நாங்கள் அமலேக்குகளை கொன்று விட்டோம்” என நடனமாடி அதனை பல காணொலிகளில் பதிவு செய்து வெளியிட்டனர். எனவே பலஸ்தீன மக்களை இனத்தின் அடிப்படையில் கொல்வது எனும் நோக்கம், இஸ்ரேல் அரசின் மேலிருந்து கீழ்மட்ட இராணுவ வீரர்கள் வரை ஊடுருவி இருந்தது என்பதை மறுக்க முடியாத ஆதாரங்களுடன் டெம்பேக்கா முன்வைத்தார்.

**இடைக்காலத் தீர்ப்பு தேவை**

அடுத்து பேராசிரியர் ஜோன் டுக்கார்ட் (John Dugard) இந்த வழக்கை விசாரிப்பதற்கான அதிகாரம் இந்த நீதிமன்றத்துக்கு உள்ளது என்பதையும், எந்த முகாந்திரத்தின் அடிப்படையில் தென் ஆப்பிரிக்கா இந்த வழக்கை முன்வைத்துள்ளது என்பதையும் விவரித்தார். இந்த வாதங்கள் மிக முக்கியமானவை. ஏனெனில் இஸ்ரேல், அடுத்த நாள் (ஜனவரி 12) தென் ஆப்பிரிக்காவுக்கு வழக்கு தொடர உரிமையில்லை என வாதிட்டது. இதனை முன் கூட்டியே அறிந்தது போல ஜோன் டுக்காட்டின் வாதம் அமைந்தது. இதன்பின்னர் வாதங்களை முன்வைத்த சட்டத்துறை பேராசிரியர் மக்ஸ் டு பிளெசிஸ் (Max du Plessis) பலஸ்தீனர்கள் தாங்கள் உயிர் வாழும் உரிமையை மட்டுமே கேட்கின்றனர் என்பதை எடுத்துரைத்தார்.

இறுதியில் மிக அற்புதமாக வாதிட்ட அயர்லாந்து பெண் வழக்கறிஞர் பிளினி நி கரலைக் (Blinne Ní Ghrálaigh) இடைக்கால தீர்ப்பு தாமதிக்கப்படும் ஒவ்வொரு நாளும் பலஸ்தீன மக்கள் உயிரையும் வாழ்வாதாரத்தையும் இழந்து கொண்டுள்ளனர் என்பதை விளக்கினார். காஸா மக்களுக்கு தண்ணீர்/உணவு/மருந்துகள்/மின்சாரம்/ இணையம் என அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது; ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் பத்து குழந்தைகள் ஒரு கால் அல்லது இரு கால்களையும் அறுவை சிகிச்சை மூலம் இழந்து கொண்டுள்ளனர்; பல சமயங்களில் மயக்க மருந்து இல்லாமலேயே அறுவை சிகிச்சை குழந்தைகளுக்கு நடத்தப்படுகிறது என்ற கொடூரத்தையும் அவர் விளக்கினார். எனவே உடனடியாக இடைக்கால தீர்ப்பு தேவை என அவர் வாதிட்டார்.

**இஸ்ரேலின் வாதம்**

இஸ்ரேலின் வாதங்கள் கீழ்கண்டவாறு இருந்தன:

- இனப்படுகொலையை அறிந்தவர்கள் இஸ்ரேலியர்கள்தான்! ஐரோப்பாவில் 60 இலட்சம் இஸ்ரேலியர்கள் நாஜிக்களால் கொல்லப்பட்டனர்.
- இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபடவில்லை.
- ஹமாஸ்தான் ஒக்ரோபர் 7ந் திகதி இனப்படுகொலையை செய்தது.
- ஹமாஸ் குழந்தைகளின் தலைகளை வெட்டியது, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தது.
- தென் ஆப்பிரிக்கா ஹமாசின் சட்டப்பிரிவு.
- காஸா மக்கள் மரணத்துக்கு காரணம் ஹமாஸ் அவர்களை கேடயமாக பயன்படுத்துவதுதான்.
- காஸாவில் கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதற்கு இஸ்ரேலின் குண்டுகள் காரணமல்ல, ஹமாசின் கண்ணி வெடிகள்தான் காரணம்
- ஒக்ரோபர் 7 ஹமாசின் தாக்குதலுக்கு பின்னர் சிலர் உணர்ச்சி வசப்பட்டு பேசியதை இனப்படு கொலைக்கான நோக்கம் இருந்தது என்பதாக எடுத்து கொள்ளக்கூடாது.

என பல ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இஸ்ரேல் முன்வைத்தது. ஒக்ரோபர் 7இல் நடைபெற்ற ஹமாசின் தாக்குதலை பல காணொலிகள் மூலம் காட்டி அவர்கள் நீதிபதிகளின் பரிதாபத்தை தேட முனைந்தனர்.

**ஆபத்தான மூன்று வாதங்கள்**

எனினும் இஸ்ரேல் வைத்த மூன்று வாதங்கள் ஆபத்தானவை. அவையாவன:

அ) இந்த வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை.

ஆ) இனப்படுகொலை தடுப்பு உடன்படிக்கையின் பிரகாரம், இரண்டு பிரிவுகளுக்கு இடையே உள்ள பிரச்சனைதான் இனப்படுகொலை என்பது. இதில் இரு பிரிவு என்பது ஹமாசும் இஸ்ரேலும். தென் ஆப்பிரிக்காவுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. எனவே இந்த வழக்கை முன்வைக்க தென் ஆப்பிரிக்காவுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

இ) இடைக்காலத் தீர்ப்பு இஸ்ரேலுக்கு எதிராக தரப்பட்டால், இஸ்ரேல் எனும் தேசம் அழிக்கப்படுகிறது என பொருள்.

இஸ்ரேலின் எந்தவொரு வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டாலும், அது பலஸ்தீன மக்களுக்கு பாதகமாகவே முடியும்.

**நீதிபதிகளும் தீர்ப்பும்**

இந்த நீதிமன்றத்துக்கான நீதிபதிகள் அந்தந்த அரசாங்கங்களால் முன்மொழியப்பட்டு, பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே பெரும்பாலும் அரசாங்கத்தின் நிலைப்பாடும் நீதிபதிகளின் நிலைப்பாடும் ஒன்றிசைந்து இருந்தால் நாம் ஆச்சரியப்பட வேண்டியது இல்லை. அதேசமயம் நீதிபதிகள் சுயேச்சையாக செயல்பட்ட பல உதாரணங்களும் உண்டு.

**சர்வதேச நீதிமன்றத்தில் உள்ள 15 நீதிபதிகள்:**

1. ஜோன் ஈ டொனோக் (அமெரிக்கா/தலைவர்), 2. கிரில் கெவோர்கய்ன் (ரஷ்யா/உதவி தலைவர்), 3. பீட்டர் டோம்கா (ஸ்லோவாக்கியா), ரோன்னி அப்ரகாம் (பிரான்ஸ்), 5. முகமது பெனவுனா (மொராக்கோ), 6. அப்துல்வாக்கி யூசுப் (சோமாலியா), 7. சூ ஹாங்கின் (சீனா), 8. ஜூலியா செபுட்டின்டே (உகாண்டா), 9. தல்வீர் பண்டாரி (இந்தியா), 10. பேட்ரிக் லிப்டன் ரொபின்சன் (ஜமைக்கா), 11. நவா∴ப் சலாம் (லெபனான்), 12. இவாசா வா யூஜி (ஜப்பான்), 13. கெரோக் நோல்டே (ஜெர்மனி), 14. ஹில்லாரி சார்லஸ் ஒர்த் (அவுஸ்திரேலியா), 15. லியானர்டோ நெமர் (பிரேசில்).

**அரசின் கருத்தையே தீர்ப்பாக்கும் நீதிபதிகள்**

தலைமை நீதிபதி அமெரிக்க அரசில் பல பதவிகளை வகித்தவர். அமெரிக்க – நிகரகுவா சட்டப் பிரச்சனையில் அமெரிக்க சட்ட நிபுணர் என்ற முறையில் நிகரகுவாவுக்கு எதிரான நிலையை எடுத்தவர். இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவில் இரண்டாம் முறை கடும் போட்டியை சந்தித்த பொழுது, இந்திய அரசாங்கம் பல தேசங்களிடம் பேசி அவரை வெற்றி பெற வைத்தது.

ரஷ்யா–உக்ரைன் போரில் பொதுவெளியில் இந்திய அரசு ரஷ்யாவை கண்டிக்கவில்லை. ஆனால் இந்த நீதிமன்றத்தின் முன்பு வழக்கு வந்த பொழுது, நீதிபதி பண்டாரி ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்தார். நீதிபதிகள் தமது அரசுகளின் நிலைபாடுகள் அடிப்படையில் தீர்ப்பளிப்பார்களா அல்லது சுயேச்சையாக தம் முன்பு வைக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் காஸா மக்களின் துன்பங்கள் அடிப்படையில் தீர்ப்பு அளிப்பார்களா எனும் சிக்கலான கேள்வி முன்வந்துள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் தாங்கள் காஸாவின் மீதான தாக்குதலை நிறுத்தப் போவது இல்லை என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

நீதிமன்றம் காஸா மக்களுக்கு ஆதரவாக தீர்ப்பு அளித்தாலும் இஸ்ரேல் அதனை ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை. தனது தீர்ப்பை அமுலாக்க வைக்கும் எந்த ஏற்பாடுகளும் நீதிமன்றத்திடம் இல்லை. எனவே தீர்ப்பு மீண்டும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு செல்லும். அங்கு இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும்.

**மக்களின் போராட்டங்களே…**

அடக்குமுறைக்கு ஆளாகும் மக்களின் பிரச்சனைகள் பெரும்பாலும் நீதிமன்றத்தில் தீர்க்கப்படுவது இல்லை. மக்களின் போராட்டம் மற்றும் ஆதரவுடன் களத்தில்தான் தீர்மானிக்கப்படுகிறது. காஸா மக்களுக்கு ஆதரவாக இடைக்கால தீர்ப்பு அமைந்தால், மக்களின் ஆதரவு மேலும் வலுவாவதற்கான சூழல் உருவாகும். எனினும் அரேபிய தேசங்களும் இஸ்லாமிய தேசங்களும் ஏனைய நாடுகளும் குறைந்தபட்ச கள நடவடிக்கைகள் எடுத்தாலொழிய, பலஸ்தீன மக்களுக்கான தீர்வு என்பது கானல் நீராகவே இருக்கும். உலகம் இன்னொரு இனப்படுகொலையை வாய் மூடி மௌனியாக பார்த்துக் கொண்டிருக்கும்.

**நன்றி: தீக்கதிர்**

# அமெரிக்க இளைஞர்கள் இஸ்ரேலை வெறுக்கின்றனர்!

**மூ**ன்று மாதங்களுக்கு மேலாக நடந்து வரும் இஸ்ரேல்–ஹமாஸ் யுத்தத்தின் பின்னணியில், அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பு ஒன்றில் 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் யூதர்களை “ஆக்கிரமிப்பாளர்கள்” எனக் கருத்துத் தெரிவித்துள்ளதுடன், இஸ்ரேலை ஹமாஸ் இயக்கத்திடம் கையளிக்க வேண்டும் எனவும் கூறியிருக்கின்றனர்.




Harvard-Harris poll என்ற அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. அந்தக் கருத்துக் கணிப்பு விபரத்தின்படி –

51 சத விகிதத்தினர் இஸ்ரேல் என்ற அரசு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும்,
32 வீதத்தினர் இரு அரசுகள் என்ற ரீதியில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்றும்,
17 வீதத்தினர் ஏனைய அரபு நாடுகள் பாலஸ்தீனர்களை தமது நாடுகளில் உள்வாங்க வேண்டும் என்றும், கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில், சகல வயதுத் தரப்பினரிடமும் நடத்திய கருத்துக் கணிப்பில், 10 அமெரிக்கர்களில் 6 பேர் இருநாட்டுத் தீர்வுக்குச் சாதகமாகவும், 19 வீதமானோர் இஸ்ரேல் ஹமாஸிடம் தரப்பட வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மறுபக்கத்தில், Economist/YouGov நடத்திய ஒரு கருத்துக்கணிப்பில், நாஜி ஜேர்மனியால் யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை ஒரு கட்டுக்கதை என்றோ அல்லது அது நடந்தது என்பதை நிச்சயப்படுத்த முடியாதுள்ளது என்றோ 30 வயதுக்குட்பட்ட அமெரிக்கர்களில் பாதிப்பேர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முன்பக்கத்தொடர்ச்சி...

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களைத் தூண்டிவிட்டு ஆட்சி மாற்றமொன்றுக்கு வழிகோலினர்.

அந்த ஆட்சி மாற்றம் மக்கள் செல்வாக்கு இழந்து இருந்த ஏகாதிபத்திய சார்பு அடிவருடியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆசனத்தில் கொண்டு வந்து இருத்தியது. ரணில் மேற்கத்தைய பாணியிலான அரசியல் – பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றுபவர் என்றபடியால், என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தார். அதாவது, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தற்காலிகமாகத் தீர்த்து, மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தடையின்றிக் கிடைப்பதற்கான வழிமுறைகளை நாடினார்.

அந்த வழிமுறையில் பிரதானமானது, ஏகாதிபத்திய வட்டிக்கடை நிறுவனமான சர்வதேச நாணய நிதியத்தின் கால்களில் விழுவது. ரணில் அதைச் செய்தார். அதன் மூலம் பல கோடி ரூபா பணத்தை நாணய நிதியத்திடம் கடனாகப் பெற்று, அதன் மூலம் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்து, பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்தார். இதன் பின்னணியில் உள்ள அபாயத்தை உணராத பொதுமக்கள், ‘அப்பாடா, ரணில் ஆட்சியில் பொருள் தட்டுப்பாடு நீங்கியது’ என நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

ஆனால் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்கள் எப்பொழுதும் இரண்டு விடயங்களில் கவனமாக இருப்பர். ஒன்று, தமது வட்டி ஒழுங்காக வருகிறதா என்று பார்த்துக் கொள்ளுவது. இரண்டாவது, தன்னிடம் கடன் பெற்றவர் உரிய காலத்தில் கடனை மீளச் செலுத்தும் வழிவகைகளில் செயல்படுகிறாரா எனக் கண்காணித்துக் கொள்வது. அதற்காக கடன் கொடுப்பவர் கடன் பெறுபவருக்கு முன்கூட்டியே சில நிபந்தனைகளை விதித்து விடுவார். சர்வதேச நாணய நிதியமும் அதைத்தான் இலங்கைக்கு கடன் கொடுக்கும்போது செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்கும் போது பலவிதமான நிபந்தனைகளை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் அரசாங்கம் அவற்றைப் பகிரங்கப்படுத்தவில்லை. இருப்பினும், அந்த நிபந்தனைகளில் ஒன்றான ‘வற்’ (பெறுமதிசேர்) வரி அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. அதன் காரணமாகவே சகல அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் வான்முட்ட உயர்ந்துள்ளன. சந்தைகளில் பொருட்கள் தாராளமாக இருந்தும் மக்கள் அவற்றை வாங்க முடியாமல் அவற்றின் விலைகள் அவர்களைத் திண்டாட வைத்துள்ளது. கோத்தபாயவின் ஆட்சிக் காலத்தில் கூட பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிய போதிலும் இவ்வளவு தூரம் விலைகள் அதிகரித்திருக்கவில்லை என பொருளாதார வல்லுனர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த நிலைமையில், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு முன்வைத்த ஏனைய நிபந்தனைகளையும் அரசு நடைமுறைப்படுத்தும் போது மக்களின் நிலை மேலும் மோசமாகலாம் என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இருந்தும் மக்கள் எதிர்நோக்கும் இந்தப் பாரிய நெருக்கடிக்குத் தீர்வுகாண எந்தவொரு அரசியல் சக்தியும் முன்வருவதாகத் தெரியவில்லை.

கோத்தபாய ஆட்சிக் காலத்தில் அவரது ஆட்சியை அகற்றும் ஒரே நோக்கத்துக்காக ஒன்று சேர்ந்த பல்வேறு விதமான, எதிரும் புதிருமான அரசியல் சக்திகளும், அவர்களுக்குப் பின்னால் இருந்து வழிநடத்தி சகல உதவிகளும் புரிந்த அந்நிய சக்திகளும், இப்பொழுது மக்கள் உண்மையான வாழ்க்கை நெருக்கடியை எதிர்நோக்கும் போது பாராமுகமாக இருக்கின்றன. இதிலிருந்து தெரிகிறது அந்த சக்திகள் 2022இல் அரசுக்கெதிராக நடத்திய ‘அரகலய’ என்ற பெயரிலான போராட்டம் உண்மையில் மக்கள் நலனுக்கானது அல்ல என்பது. இந்த முதலாளித்துவ சந்தர்ப்பவாத சக்திகளது ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பின்னால் குறிப்பிட்டதொரு நிகழ்ச்சிநிரல் இருக்கின்றது என்ற உண்மையை இந்த நிலைமை புட்டு வைக்கின்றது.

உண்மையில் இப்பொழுதுதான் உண்மையான ‘அரகலய’ போராட்டத்துக்கான ஒரு தேவை எழுந்துள்ளது. அதற்குத் தலைமை கொடுத்து வழிநடத்த தற்பொழுது இலங்கையில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் தயாராக இல்லாதபோதும், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், தனிப்பட்ட மக்கள் நலன் விரும்பிகள் முன்வந்து மக்களது ஒற்றுமையைக் கட்டியெழுப்பி போராட்ட அரங்கொன்றைத் திறக்க வேண்டும். இதற்கான முன்னனுபவம் 1953 ஓகஸ்ட் 12 ஹர்த்தால் போராட்டத்தின் மூலம் கிடைத்திருக்கின்றது என்ற விடயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

மக்கள் மனது வைத்தால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

“மக்கள், மக்கள் மட்டுமே, வரலாற்றின் உந்து சக்தியாவர்”.

---

10ம் பக்கத்தொடர்ச்சி...

குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதுடன், பிள்ளைகள் உரிய காலத்துக்கு முன்னரே பாடசாலைகளை விட்டு விலகுவது 60 வீதமாக அதிகரித்துள்ளது என்பதும் தெரிய வந்துள்ளது.

பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்காக ஒரு குடும்பத்துக்கு வருடமொன்றுக்கு மேலதிகமாக 160,000 ரூபா தேவைப்படுவது ஆச்சரியத்துக்குரியதொன்றல்ல. பொருட்கள் கடைகளில் கிடைத்தாலும் பெரும்பான்மையான ஏழை மக்களுக்கு அவற்றை வாங்கக்கூடிய சக்தி இல்லை.

அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவைப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துப் பேசினாலும், அவற்றை நடைமுறையில் காண முடியவில்லை. இன்னொரு ‘அரகலய’ மாதிரியான நிலைமை ஏற்படாமல் தடுப்பதானால் இப்பொழுதே உடனடியாக சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.


(கொழும்பிலிருந்து வெளியாகும் ‘டெயிலி மிரர்’ பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகள் இவை)

---

அறிவியலாளர்களுக்கும், உழைப்பாளர்களுக்கும் இடையிலான கூட்டிணைவே வறுமை, நோய் மற்ற அவலங்களுக்கு முடிவுகட்டும். அந்தக் கூட்டணியின் சக்திக்கு முன் எத்தகைய இருளும் நீடித்திருக்க முடியாது.

**-லெனின்**

# ஆன்மீகத் தலமாகுமா, அயோத்தி ராமர் கோவில்?



அயோத்தியில் ராமர் கோவில் கட்டியதன் மூலம் காந்தியின் ராம ராஜ்யம் கனவுக்கு உயிர் கொடுத்துள்ளதாம் மோடியின் பாரதிய ஜனதாக்கட்சி அரசு! காந்தி தீவிரமான ராம பக்தர் தான்! ஆனால், தற்போது எழுப்பப்பட்டுள்ள ராமர் கோவில் இந்தியத் தேசத் தந்தை காண விழைந்த ராமர் கோவிலா? இது தான் காந்தியின் கனவா..? என்பதை பார்ப்போம்.

முதலாவதாக ஒன்றை தெளிவுபடுத்திக் கொள்வோம். காந்தி ராம ராஜ்யத்தை விரும்பியவரே அல்லாது, ஒரு போதும் பாபர் மசூதியை இடித்து, அங்கு ராமர் கோவில் கட்ட வேண்டும் எனக் கேட்டதாக எங்குமே வரலாற்றில் பதிவாகவில்லை.

காந்தி தான் வணங்கும் ராமர், 'வரலாற்று ராமர் அல்ல' என்றும், 'நித்தியமானவர், பிறக்காதவர், புராணங்களில் சொல்லப்படுபவரல்ல' என்றும் தெளிவுபடுத்தி உள்ளார். 'தன்னுடைய ராமன் அனைவருக்குமானவர், எல்லோரையும் சமமாக பாவிப்பவர், பஞ்சம், பசி, வறுமை, வன்முறையற்ற இந்தியாவுக்கானவர்' என விவரித்துள்ளார் காந்தி!

காந்தி விரும்பியது எளிமையை! பா.ஜ.க அரசு விரும்புவது மிகப் பெரும் பிரம்மாண்டங்களை! ராமர் கோவிலோ பிரம்மாண்டத்திலும் பிரம்மாண்டமே! 1,800 கோடிகள் செலவில் ராமர் கோவிலாம்! ஆனால், வசூலிக்கப்பட்ட தொகையோ இதைவிட இரண்டு மடங்கு! மீதி தொகையைக் கொண்டு பற்பல வியக்க வைக்கும் கட்டுமானங்களை கட்டி வருகின்றனர். இந்தியாவின் மத்திய, மாநில அரசுகளின் வரிப்பணத்தைக் கொண்டு அயோத்தி நகரத்தை ஒரு சுற்றுலா தளமாக்க பல ஆயிரம் கோடிகளில் சாலை வசதிகள், ரயில்வே பாதை விரிவாக்கம் மற்றும் பெரிய ரயில்வே ஸ்டேசன், சர்வதேச தரத்தில் ஏர்போர்ட், பளபளக்கும் அகன்ற சாலைகள்.. என அனைத்திலும் பிரம்மாண்டம்!

மொத்தம் 70 ஏக்கர் நிலமாம்! அதில் பிரதான கோவில் 2.7 ஏக்கர் தாம்! இராமர் சிலை ஐந்தடி உயரமாம்! மூன்று சிலைகள் செய்ததில் ஒன்றை மட்டும் தேர்வு செய்துள்ளனராம். இந்த பிரதான இடம் தவிர, மற்றவை தோட்டங்கள், நீருற்றுகள், உணவகங்கள் கருத்தரங்கு கூடங்கள், இன்னும் பற்பல பொழுது போக்கு அம்சங்களை உள்ளடக்கியதாம்!

எந்த ஒரு கோவிலும் அர்ப்பணிப்பால், தியாகத்தால் எழுந்து நின்றால் தான் அதன் பலன்கள் மக்களுக்கு போய்ச் சேரும். நாம் தற்போது கும்பிடுகின்ற பாரம்பரிய மிக்க கோவில்கள் சுயநலம் துறந்த ஒரு சிலரின் தவ வலிமையாலும், அர்ப்பணிப்பாலும் எழுப்பபட்டவையாகும்! அதனால் தான் சில நூற்றாண்டுகளைக் கடந்தும் மீனாட்சி அம்மன் கோவிலும், திருவண்ணாமலை சிவன் கோவிலும், ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலும் இன்னும் மக்களைப் பொறுத்தவரையில் சக்தி வாய்ந்த தளங்களாக உள்ளன!

***சாவித்திரி கண்ணன்***

கோவில் கட்டுவதற்கு பணமும், அதிகாரமும் போதுமானதல்ல! பணத்தாலும், அதிகாரத்தாலும் பிரம்மாண்ட கட்டிடத்தை வேண்டுமானால் எழுப்பலாம். ஆனால், காலாகாலத்திற்கும் மனிதர்களின் மன அமைதிக்கும், உள்ளத்தின் உத்வேகத்திற்கும் உரமளிக்கும் ஆன்மீகத் தளமாகும் கோவிலை எழுப்ப முடியாது.

இந்தக் கோவிலை கட்டி எழுப்ப ராஜஸ்தானின் பரத்பூர் மாவட்டத்தின் பன்சி என்ற வனப்பகுதியில் உள்ள பழங்குடிகளின் கிராமமே சூறையாடப்பட்டு அங்குள்ள மலைகள் நொறுக்கப்பட்டு கிரானைட் கற்கள் எடுக்கப்பட்டுள்ளன!

அதுவும் இந்த ராமர் கோவில் சில நூற்றாண்டுகளாக புழக்கத்தில் இருந்த பாபர் மசூதியை இடித்து கட்டப்பட்டது! இந்தியாவில் உள்ள சுமார் 15 கோடி இஸ்லாமியர்களின் இதயத்தை ரணமாக்கியதோடு, பாபர் மசூதி இடிப்புக்கு பின்பான கலவரங்களில் இரண்டாயிரம் மனித உயிர்களை காவு வாங்கி எழுப்பப்பட்டுள்ளது. அத்வானியின் ரத யாத்திரைகளிலும், கலவரங்களிலும் சிந்தப்பட்ட இரத்தங்கள் கொஞ்சமா? நஞ்சமா? எரித்து சேதாரமாக்கப்பட்ட சொத்துக்கள் எவ்வளவு? இந்தக் கலவரங்களில் நிர்கதியான குடும்பங்களில் இன்னும் சோகம் தொடர்கிறதே?

இந்தியாவில் சுமார் 300 ராமாயணங்கள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்தை ராமர் பிறந்த இடமாக குறிப்பிட்டுள்ளன!. கடந்த காலங்களில் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள சீன யாத்ரீகரான யுவான்சுவாங் உள்ளிட்ட எந்த யாத்ரீகரும் அயோத்தியில் ராமர் கோவில் இருந்ததாக பதிவு செய்யவில்லை. அயோத்தியில் கோவிலுக்காக தோண்டப்பட்ட போது கீழே எந்த

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**